# விடுதலைப்புலிகள்

குரல் – 109 | வைகாசி – ஆனி, 2003 | அன்பளிப்பு : 10/=



03 வரலாற்றின் இனிய பதிவுகள்

05 சமாதானம்:மேற்குலகமும் ஏமாற்றப்படுகிறது பலிக்கடாவாவது தமிழர் மட்டும்தான்

07 வெருகோமலையில் இருக்கிறது யுத்தத்திற்குத் திரும்பவியலாத கட்டம்

08 இராசதந்திரமும் கற்கவேண்டிய பாடங்களும்


# போர்நிறுத்த உடன்பாட்டு மீறல்கள் பேச்சை பின்நோக்கி இழுக்கும்



மீண்டும் பொங்கிய மிடுக்கு

**புலிகள் இயக்கத்தின் பொறுமையைச் சோதிக்கும் அளவுக்கு சிங்களப்படைகளின் போர்நிறுத்த மீறல்கள் எல்லை கடந்துவிட்டன.**

அனேகமான மீறல் சம்பவங்கள் புலிகளை சீண்டி சண்டைக்கிழுக்கும் உள்நோக்கத்துடன் செய்யப் படுகின்றன.

சமாதான சூழலைக் குலைத்து போர்ச்சூழலை உண்டுபண்ண சிங்களப் பேரினவாதிகள் விரும்பு கின்றனர்.

ஒருபுறம் போர் நிறுத்த மீறல்களை சனாதி பதி சந்திரிகா அம்மையார் தூண்டியும்-தானே முன் னின்று நடாத்தியும் வருகின் றார்.

மறுபுறம், இத்த கைய மீறல் நடவடிக்கை களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளையும் எடுக் காமல் வெறும் பார்வையா ளனின் மனநிலையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் உள்ளது.

சிங்களத்தின் இந்த அரசியல் யதார்த்தம் சமா தானப் பேச்சுவார்த்தை களை அர்த்தமற்றதொன் றாக மாற்றிவருகின்றது.

இதேவேளை போர் ஓய்வைக் கண்காணித்து சமாதான சூழலை வளர்த் தெடுக்கும் இலக்குடன் பணியாற்றவந்த வெளி நாட்டுக் கண்காணிப்பாளர் குழுவினரும் படையினரின் போர்நிறுத்த மீறல்களை தடுத்து நிறுத்தும் திராணி யற்றிருக்கின்றனர். எல்லாம் நடந்த பின்னர் பத்திரிகை யாளர்களை சம்பவ இடத் திற்கு அழைத்து செய்தி கூறுவது போல, போர் நிறுத்த கண்காணிப்பாளர் களை, சிங்களப்படைகள் நடாத்துகின்றனர்.

கடலில் சிங்களப் படைகள் அடுத்தடுத்து நடாத்திவரும் அடாவடித் தனங்கள் புலிகளது பொறுமையை அளவுக் கதிகமாகச் சோதித்து விட்டன.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# இலட்சிய உறுதிகொண்ட ஒரு துணிச்சலான மனிதன்



மாமனிதர் குமார் பொன்னம் பலத்தின் குடும்பத்தினரை 11/05/2003 அன்று கிளிநொச்சியில் சந்தித்த தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் "மாமனிதர் விருதினை" அன்னாரது குடும்பத்தி னரிடம் கையளித்து- கௌரவித்து ள்ளார்.

திரு.குமார் பொன்னம்பலத் தின் துணிச்சலையும் அவரது அரசியல் நேர்மையையும் - தமிழ் மக்களுக்கு அவர் புரிந்த சேவை யையும் இந்த வைபவத்தில் தலைவர் பிரபாகரன் புகழ்ந்துரைத் திருந்தார்.

தனது உயிருக்கு பேரா பத்து நேரப்போகின்றது என்பதை நன்றாக உணர்ந்திருந்தும் தான் வரித்துக் கொண்ட கொள்கையை விடாது எதிர் கொண்டு - அதற்காக தனது இன்னுயிரை அர்ப்பணித் ததை, தலைவர் அவர்கள் நினைவு கூர்ந்தார்.

கௌரவிப்பு நிகழ்ச்சியில் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் துணைவியாரும்-அவரது பிள்ளைகளும் கலந்துகொண்டனர்.

தமிழரது ஆயுதம்தாங்கிய விடுதலைப் போராட்டத்தின் உச்சக்கட்டத்தில், புலிகள் இயக்கத்தின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு - போராட்டப் பரப்புரை செய்த தமிழ்ப் பிரமுகர்களில்

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

# பேச்சை நெருக்கடி நிலைக்குள் அரசு விரும்பித் தள்ளுகின்றதா?

ஒன்றரை வருடகாலமாக சிங்கள அரசு நடாத்திவரும் 'இழுத்தடிப்பு அரசியல் தந்திரோபாயத்திற்கு' முற்றுப்புள்ளி இடப்பட்டுவிட்டது.

ஏதோ ஒரு முடிவை சொல்லவேண்டிய தீர்மானகரமான நிலைக்கு அது ஆளாக்கப்பட்டுள்ளது.

அதுவும் வெறும்வார்த்தைகள் மூலமல்ல, செயல்மூலம் பதிலளிக்கவேண்டிய கட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க சிங்கள அரசு அரசியல் வழிமுறையை விரும்புகின்றதா! அல்லது இராணுவ வழிமுறைகளைத் தொடரப்போகின்றதா!

சமாதான வழியில் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுதேடும் விருப்புடன் சிங்கள அரசுடன் ஒரு போர்நிறுத்த உடன்பாட்டிற்கு புலிகள் இயக்கம் வந்திருந்தது.

இராணுவ நெருக்குவாரங்கள் தணிந்த - ஒரு இயல்புச் சூழலை தமிழர் தாயகத்தில் ஏற்படுத்துவது சமாதானப் பேச்சின் அடித்தளமாகக் கொள்ளப்பட்டது.

மக்கள் வாழிடங்கள் - பொது இடங்களிலுள்ள இராமணுவ முகாம்கள் விலக்கப்பட்டு, மக்களின் மீள்குடியேற்றத்திற்கு வழிவிடப்படும் என்று அரசு எழுத்து மூலம் உறுதியளித்திருந்தது.

எடுப்பதுபோல் ஆரம்பத்தில் ஒரு தோற்றப்பாட்டைக் காண்பித்த சிங்களப் படைகள் இப்போது முகாம்களையும் - காவல் அரண்களையும் புதிது புதிதாக அமைத்து வருகின்றன. ரோந்துகள் - சுற்றிவளைப்புக்கள் - கைதுகள் - விசாரணைகள் என 'போர் நிறுத்தகால ஆக்கிரமிப்பாளர்களாக' சிங்களப் படைகள் செயற்படத் தொடங்கியுள்ளன.

இதேபோல, போரால் சிதைந்த தமிழர்களின் வாழ்க்கையை மேம்படுத்த புனர்வாழ்வு - புனர்நிர்மாண வேலைகள் புலிகளின் தலைமையில் மேற்கொள்ளப்படும் என்றும் இணக்கம் காணப்பட்டிருந்தது. அதற்கான சில கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டிருந்தன. இவை எதற்குமே செயலாற்றும் அதிகாரங்கள் அளிக்கப்படாததால் ஒன்றன்பின் ஒன்றாக அனைத்து கட்டமைப்புகளும் செத்துவிட்டன.

தமிழ் - சிங்கள இனமோதலுக்கு அரசியல் வழிமூலம் தீர்வுதேடும் நேர்மையும் - துணிச்சலும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கு உண்டென்று ஆரம்பத்தில் நம்பப்பட்டது.

ஆனால், அவர்கள் உருவாக்கிய நம்பிக்கையை, இப்போது, அவர்களே தகர்த்தெறிந்துள்ளனர்.

சமாதான காலத்தில் புலிகளுக்கு எதிராக ஒரு சர்வதேச வலைப்பின்னலை தாம் உருவாக்கிவிட்டதாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூறுமளவுக்கு அரசியல் நேர்மையீனமாக நடந்துள்ளார். தமிழரின் விடுதலை வேட்கைக்கு எதிராக அரசியல் சதியில் ஈடுபட முனைகின்றார்.

வட - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத்தைப் புலிகள் இயக்கத்திற்கு வழங்குவோம்! இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக சமஷ்டி முறையை வழங்குவோம்! என்று வார்த்தை ஜாலம் செய்துவந்த அவர்கள் இப்போது அரசியல் அமைப்புக்கு முரணாக இயங்க தம்மால் முடியாது என புதிதாக சாட்டுக்கள் சொல்கின்றனர்.

சிங்களத்தின் அரசியல் அமைப்பு அழிவைத்தவிர ஆக்கபூர்வமான எதையும் தமிழர்க்கு வழங்காது. தமிழின நிராகரிப்பு என்பதே சிங்களத்து அரசியல் அமைப்பின் சாராம்சமாகும்.

போர் தொடங்கினால் இந்தியா - அமெரிக்கா ஆகியன தமக்கு இராணுவ உதவிகள் நல்கும் என்று பேச்சுவார்த்தையில் அங்கம் வகித்துக் கொண்டே அமைச்சர் மிலிந்த மொறகொட இறுமாப்பாகக் கூறியுள்ளார்.

இதுவரை காலமும் சிங்களப்படைகள் தனியாகப் போர்புரிந்தது போலவும் இனிமேல் தான் வெளிநாட்டு இராணுவ உதவிகளுடன் புலிகளுடனான போரை வெல்லப்போவது போலவும் அவர் பேசியுள்ளார்.

ரணில் அரசாங்கத்தின் இத்தகைய அரசியல் திருவிளையாடல்களையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்த்தால் முன்னைய சிங்கள ஆட்சியாளர்களின் இனவெறி அரசியலையே இவர்களும் தொடர விரும்புகின்றனரா என்ற கேள்வி எழுகின்றது.

எது எப்படியோ! குழம்பிப்போயுள்ள சமாதானப் பேச்சுக்களுக்கு புத்துயிர்கொடுத்து பேச்சுவார்த்தைகளைத் தொடரவேண்டிய தலையாய பொறுப்பு ரணில் அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது.

புலிகள் இயக்கம் கோரிவருவதுபோல வட - கிழக்கிற்கான இடைக்கால அரசை புலிகள் இயக்கத்திற்கு வழங்குவதன்மூலம் தடைப்பட்டுப்போயுள்ள பேச்சுவார்த்தைகளைத் தொடர முடியும்.

அதன்மூலம் இனப்பிரச்சினையை அரசியல் வழிமூலம் அரசு தீர்க்க முனைகின்றது என்ற நம்பிக்கையையும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தலாம்.

அதைவிடுத்து ஏதாவது சாக்குப்போக்குக் கூறிக்கொண்டு இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு வழங்க மறுத்தால், சிங்கள அரசு, சமாதானப்பேச்சை நெருக்கடி நிலைக்குத் விரும்பித் தள்ளிச் செல்கின்றது என்பதே அர்த்தமாகும்.

ஒன்றரை வருட சமாதானத்தின் எதிர்காலம் பற்றி உறுதிப்படுத்தவேண்டிய கட்டத்தில் சிங்கள அரசு உள்ளது என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமாகும். ●

---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசக் கடல் வழியே பொருட்களை ஏற்றிச் செல்லும் புலிகளின் கப்பல்களை வழிமறித்துதாக்கி-மூழ்கடித்துவிட்டு அவை ஆயுதங்களுடன் சிறிலங்கா கடற்பரப்புக்குள் நுழைந்தன என்று புலிகள் இயக்கம் மீது பழிசுமத்துகின்றன.

புலிகளின் கடற்கலங்கள் மீது சந்தேகம் ஏற்பட்டால் கண்காணிப்புக் குழுவினரை அழைத்து அவர்கள் கண்முன்னால் சிங்களக் கடற்படை தனது சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளலாம் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தப் பட்டது.

ஆயினும், சிங்களக் கடற்படை எதேச்சாதிகாரமாக தொடர்ந்தும் புலிகளின் கப்பல்களைத் தாக்கி வருகின்றது.

சர்வதேச கடற்பரப்பில் இரண்டு கப்பல்களை அதன் மாலுமிகளுடனும் - பொருட்களுடனும் தாக்கி மூழ்கடித்துள்ளது.

நெடுந்தீவுக்கடலில் கடற்படகொன்றின் அழிவிற்கும் மூன்று கடற்புலிவீரர்களதும் சாவுக்குக் காரணமாக இருந்துள்ளது.

அத்துடன் வடக்கு - கிழக்கு கரையோர மக்களின் தொழிலிற்கு தொடர்ந்தும் முட்டுக்கட்டைபோட்டு - அவர்களின் சொத்துக்களை அழித்தும் அப்பட்டமான போர்நிறுத்த மீறல்களை செய்து வருகின்றது.

இதுபோல சிங்கள இராணுவமும் தமிழர் தாயகப் பகுதியெங்கும் போர்நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது. உடன்பாட்டிற்கு முரணாக ரோந்துகளை - வீதிச் சோதனைகளை மேற்கொண்டும், காவல் அரண்களை, இராணுவ தங்ககங்களை புதிதுபுதிதாக அமைத்தும் போர்நிறுத்த உடன்படிக்கையை கேலிக்கிடமாக்கி வருகின்றன.

படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள புலிகளின் அரசியல் அலுவலகங்களை சுற்றிவளைப்பதும் - உள்நுழைந்து சோதனையிட முயல்வதும் அப்பட்டமான போர்நிறுத்த மீறல்களாகும்.

அதேபோல, படையினரின் போர்நிறுத்த மீறல்களை அந்த அந்த இடங்களிலேயே கண்டித்து - தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் மக்களை, சிங்கள இராணுவம், பயமுறுத்தியும் - சிலசமயங்களில் தாக்கியும் வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில், திருமலை மாவட்டத்தில் படையினர் செய்த படுகொலைகள் அனைவரும் அறிந்ததே .

மட்டக்களப்பில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த போராளி ஒருவரை கைது செய்து - சிங்கள நீதிமன்றில் நிறுத்தி - தடுத்துவைத்துள்ளனர்.

சிங்கள வான்படையின் வேவு விமானங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது பறந்து - வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஒப்பந்த மீறல்களை புரிந்து வருகின்றன.

இவ்விதம், சிங்கள அரசின் முப்படைகளும் - பாரபட்சமின்றி - போர் நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு அமைதிப் பேச்சை சீர்குலைத்து வருகின்றன. இதைத் தடுத்துநிறுத்த முடியாமலும்- விரும்பாமலும் சிங்கள அரசும் உள்ளது.

இந்நிலையில், சமாதான முயற்சி என்பது சிங்கள தரப்பால் கைவிடப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. ●




www.eelamview.com

# வரலாற்றின் இனிய பழிவாங்கல்

தற்போது தேக்க நிலையடைந்திருக்கும் பேச்சுவார்த்தை குறித்து சிங்களத்தில் 'உயிர் போவதற்கு' முன்பே பிரேதப் பரிசோதனைகள் ஆரம்பமாகிவிட்டன. "எங்களுக்கு முதலிலே தெரியும்" "நாங்கள் அப்பவே சொன்னோம்'' "புலிகளின் போக்கு தெரிந்தது தானே'' என சிங்களத்தில் கூட்டுப்பிரார்த்தனைகள் ஆரம்பமாகிவிட்டன. சிங்களத்தின் சீழ் வடியும் புண்களில் புழுக்களாக நெளிவோரின் இக்கூற்றுக்களைப் புறம் தள்ளிப் பார்போமேயானால் எல்லாச் சிக்கல்களிற்கும் மூல காரணம் எதுவென்பது மிகத் தெளிவான சங்கதியாகின்றது. அமைதித் தேரின் எதிர்கால நகர்வு, எதிர்கால மேம்பாட்டின் திறவுகோல், ஒரு பெரும் போரின் தொடக்கம் இவையாவுமே எதில் தங்கி, தொங்கி நிற்கின்றன? நரித்தனமும் நயவஞ்சகமும் ஓரவஞ்சனையும் ஒடுக்குமுறையும் நிரம்பிய சிங்களத்தின் கேடுகெட்ட அரசியல் யாப்பின் வரிகளுக்குள்ளே இவை யாவும் சிக்கி நிற்கின்றன. தமது கண்களைத் தாமே மறைத்து தமது கைகளைத் தாமே கட்டிவிட்டு செய்ய விருப்பந்தான் – ஆனால் செய்யமுடியாமல் உள்ளதே என வித்தை காட்டும் சிங்களத்தை அம்பலப்படுத்துவதே இனித் தமிழர் பணி.

இன்று எமது விடுதலைப் போராட்டம் விடிவென்னும் இலக்கினையடைவதற்கான முப்படிகளில் இரண்டாம் படிநிலையில் நிற்கின்றது. விடுதலைக்காக எம் மக்கள் போராடத் தயாராகி விட்டார்கள் என்பதே புதிய தமிழ்ப்புலிகள் என்கிற தொடக்கப் பெயரை மாற்றி விடுதலை என்கிற பேரிலட்சியத்தை 1976 மேத்திங்கள் ஐந்தாம் நாள் இயக்கப் பெயரோடு இணைத்தபோது பிரபாகரன் உலகிற்குணர்த்திய செய்தி. 15/10/1981 அன்று சிறிலங்கா இராணுவத்தின் மீதான முதல் தாக்குதலை தொடுக்க பணித்தபோது தமிழ்மக்கள் அடையவேண்டிய முதலாவது படிநிலை நோக்கி பயணத்தை அவர் ஆரம்பித்தார். அன்று தொடங்கிய பயணம் ஆனையிறவு கைப்பற்றப்பட்ட சமர் – அக்கினிச் சுவாலை முறியடிப்புச் சமர் வழி உயர்நிலையடைந்தது. இராணுவ ரீதியாக எதற்கும் முகம் கொடுக்கும் ஆற்றல் கைவரப் பெற்ற தேசியப் படையணியைக் கொண்ட இனமாக எம்மினத்தை மாற்றியது. எனவே முதலாவது படிநிலையென்பது இராணுவ வன்மை கைவரப்பெற்ற நிலை.

ஆகவே இரண்டாம் படி நிலையெது என்கிற வினா எழுகின்றது. இராணுவ வன்மை நிலையை ஆதாரமாகக்கொண்டு எமக்கான அரசியல் ஆளுமையை உலகில் உறுதிப்படுத்தும் நிலை. எமது அரசியல் இலக்கு, அதற்கான வரலாற்று வழிவந்த தார்மீக நியாயம் இவற்றினை மனுக்குலத்திற்கு விளக்கி அடையப்படும் அரசியல் உயர் நிலையிது. இத்தனை காலமும் உலகின் கண்களுக்கு தெரியாமல் சிங்கள ஆட்சியாளர் மனப்புற்றுக்குள்ளே மறைந்திருக்கும் இனவாத மேலாண்மையென்னும் நச்சரவத்தினை வெளிப்படுத்தவேண்டிய காலமிது. எனவே இவை தொடர்பில் முன்னைய வரலாற்றினை எமது தெளிவிற்காக ஒரு முறை திரும்பிப் பார்த்திடுதல் நலம். அப்போதுதான் பின்வரும் வினாக்களுக்கான விடையை நாம் பெறுவதோடு உலகிற்கும் உரைக்க முடியும். இத்தீவில் முதன் முதலில் இனவாதத்தினை இருபக்கத்திலும் நிராகரித்து இணக்கமாக இரு இனங்களும் 'சரிநிகர் சமானமாக' வாழ்வதற்கு இலங்கைக்கு பூரண சுயஇராச்சியம் கோரியவர் யார்? அப்போது ஆங்கிலேயரால் கட்டித் தொங்கவிடப்பட்ட அரசியல் ஆட்சியதிகாரமென்னும் இரைக்கு ஆசைப்பட்டு தமிழரை கைவிட்டு ஆங்கிலேயரின் 'செல்லப் பிள்ளைகளாக' மாறியவர் யார்? இதனால் தமிழரை தனிவழி காண நிர்ப்பந்தித்தவர் யார்?




**விடுதலைக்காக எம் மக்கள் போராடத் தயாராகி விட்டார்கள் என்பதே புதிய தமிழ்ப்புலிகள் என்கிற தொடக்கப் பெயரை மாற்றி விடுதலை என்கிற பேரிலட்சியத்தை 1976 மேத் திங்கள் ஐந்தாம் நாள் இயக்கப் பெயரோடு இணைத்தபோது பிரபாகரன் உலகிற்குணர்த்திய செய்தி.**

1970களில் இனமானம் மிகுந்த புரட்சி வன்முறையைத் தழுவிய தமிழ் இளைஞர் எழுச்சி தோன்ற ஐம்பது வருடங்களுக்கு முன்பே தமிழ்ப் பகுதிகளில் இன்னொருவகை இளைஞர் விழிப்பு தோன்றியது.

**க. வே. பாலகுமாரன்**


1920களில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் எனும் அமைப்பு தோன்றியது. அன்றைய காலகட்டத்தில் முழு இலங்கையிலுமே அரசியல் விழிப்புப்பெற்று நேரிய சிந்தனை கொண்ட இவர்கள் இனவாதத்தினை நிராகரித்து இலங்கைக்கு பூரண சுயராச்சியம் கோரினர். தேசிய மட்டத்தில் ஒற்றுமையை வலியுறுத்தினர். தமிழர் மத்தியில் தீண்டாமையை அகற்ற முயன்றனர். இந்தியக் காங்கிரசின், காந்தியின் செல்வாக்கிற்குட்பட்ட இவர்கள் காந்தியையே இங்கு வரவழைத்து இலங்கை முழுவதுமே சுதந்திரக் குரலை எழுப்ப வழிவகுத்தனர். சிங்களத் தலைவர் பலரும் இந்நிலையை ஏற்று செயற்படவும் முன்வந்தனர். இரு இனத்தின் தலைமையையும் ஒன்று சேரவிடாமல் தடுத்து அதில் குளிர்காய முயன்ற ஆங்கிலேயர் தமிழ் இளைஞர் அரசியல் விழிப்புக் கண்டு திகைத்தனர். எனவே வழமையான தமது அடுத்த நகர்வினை டொனமூர் அரசியல் சீர்திருத்தங்கள் வழி மேற்கொண்டனர். அதே வேளை டொனமூரின் குழுவினை புறம் தள்ளிய மாணவர் காங்கிரஸ் காந்தியை இங்கு வரவழைத்து நாடெங்கும் கூட்டங்கள் நடாத்தினர். அந்நிலையில் டொனமூர் என்ன செய்தார்?

அவர் தனது சீர்திருத்தங்களின் படி தமிழரின் மிச்ச சொச்ச பிரதிநிதித்துவத்தையும் மேலும் குறைக்க வழி கண்டார். எதிர்கால அரசாட்சி சிங்களவருக்கே என நம்பிக்கை தரத்தக்கதாக நிருவாக அலகுகளை உருவாக்கினார். ஆள்வதற்கான பயிற்சியையும் பெற இது வழியெனவும் கூறிக் கொண்டார். தமிழரோடு இணைந்து பூரண சுய இராட்சியக் கோரிக்கைக்கு குரல் கொடுத்திருக்க வேண்டியவரோ இது தான் தருணம் என தமிழரை ஏறி மிதித்தோடினர். இக்கால கட்டம் பற்றி நீதியாளராகவிருந்து பின் புலம் பெயர்ந்த வரலாற்றாசிரியர் சச்சி பொன்னம்பலம் பின்வருமாறு கூறியிருக்கிறார். "காந்தியின் இலட்சியத்திலும் இந்திய விடுதலை இயக்கத் தாலும் ஈர்க்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் துடிப்புள்ள முற்போக்கான இளைஞர் 1929களில் இலங்கைக்கு பூரண சுதந்திரம் கோரினர். ஒன்றுபட்ட ஒற்றுமையான இலங்கையை வேண்டி இனவாதப் போக்கினை இரு தரப்பிரும் நிராகரித்தனர். எனவே 1931ஆம் ஆண்டு தேர்தலினை தேசிய மட்டத்திலே நிராகரிக்குமாறு வேண்டினர்.''













அன்று இவர்கள் வேண்டுகையை சிங்களவர் ஏற்றிருந்தால்? ஆனால் இவர்கள் கோரிக்கையை சிங்களவர் புறம் தள்ளினர். தமிழ்ப் பகுதிகளில் மட்டுமே வாக்களிப்பு நடைபெறவில்லை. இலட்சியப் பற்றும் நன் நோக்கமும் கொண்ட இளையோர் விரக்தியுற்றனர். செயலற்றுப் போயினர். சிங்களத் தலைவர்களோ புதிதாக கிடைக்கப்போகும் அதிகாரத்தை உருசி பார்க்க ஆயத்தமாகினர். இவ்வாறுதான் இன்றைய வரலாற்றுக் கட்டத்தின் முதல் கட்டமைந்தது.

ஐம்பதாண்டுகள் கழித்து இரண்டாம் கட்டம் பரிணமித்தது. 1970களில் தமிழ் வாலிபர் போக்கில் எத்துணை வேறுபாடு? தமிழர் வாலிபர் போக்கில் எத்துணைவேறுபாடு? எத்துணை மாறுபாடு? *இதுவொரு இனிய பழிவாங்கல்.* தேசிய ஒற்றுமை, மென்முறை அரசியல் என்பவற்றை கனவிலும் கணக்கிலெடுக்காத புதிய இளைய தலைமுறை தமிழ்த் தேசியத்தில் முகிழ்த்தது. இனவிடுதலைக்காக புரட்சிகர வன்முறையை வரித்து போராட இவர்கள் முற்பட்ட போது ஆங்கிலேயர் முன்படைந்த அதிர்ச்சியை விட பன்மடங்கு அதிர்ச்சியை சிங்களவர் அடைந்தனர். இந்நிலையிலேயே சிங்களவர் ஆட்சியை மேலும் நிலைநிறுத்துவதற்காக தமிழ் மக்கள் முன்னே இன்னொரு யாப்பினை முன்வைத்தனர். பேரினவாதத்தினை பெருந்தேசிய வெறியினை மெத்தப்படித்த கொல்வின் சனநாயக சோசலிச குடியரசென மாய்மாலப் பெயரிட்டு 1972ஆம் ஆண்டு யாப்பாக்கினார். வாளேந்திய சிங்கக் கொடியினை தேசியக் கொடியாக்கி, சிங்கள மொழியை அரச கரும மொழியாக்கி, பௌத்த மதத்தினை அரச மதமாக்கி அதை பேணிக் காப்பதே அரசின் கடமையென யாப்பு கூறியபோது தமிழ் இளைஞரின் இன மானத்திற்கு அது சவாலாகியது.

இவ்வாறு தான் அரசியல் யாப்பின் அழிவுப் பாதையின் இரண்டாம் கட்டம் ஆரம்பித்தது. எம் மக்களின் அரசியல் இருப்பையே கேள்விக்குறியாக்கிய இவ் யாப்பே தரப்படுத்தலையெதிர்த்து வீதிக்கிறங்கிய மாணவர்களை விடுதலைப் போராளிகளாக தர மாற்றமடைய வழிவகுத்தது. வீரத்தியாகி சிவகுமாரனை வீறுடன் செயற்பட வைத்தது. அவரே துணிவும், நல்லொழுக்கமும் போலித்தனமும் அற்ற, எதையும் ஈகம் செய்யும் இளைஞர் பரம்பரையின் முன்னோடி ஆவார். அவர் எண்ணியதை அவர் செய்யமுயன்று முடிக்காமல் விட்டதனை துரோகி துரையப்பா

(தொடர்ச்சி 14ம் பக்கம்)



www.eelamview.com

# தமிழரின் சமூகச்சீரழிப்புக்கு சிங்களப்படைகள் எத்தனிப்பு

ஈழத்தமிழரின் சமூகக் கட்டமைப்பு மெச்சத்தக்க பல விழுமியங்களைக் கொண்டது. தனிநபர் ஒழுக்கம் குடும்பப் பிணைப்பு - சட்டம் ஒழுங்கை மதிக்கும் தன்மை - பெண்மையை கௌரவித்து, பாதுகாக்கும் பண்பு என்பன தமிழினத்தின் சிறப்பம்சங்களாக, காலங்காலமாக, இருந்து வருகின்றன.

தமிழரின் அரசியல் விடுதலைக்கான சுதந்திரப்போர் ஆரம்பமாகி கடந்த இரண்டு தசாப்தகாலமாக, பெரும் போர்ச் சூழலுக்குள்ளும், இந்த உயர் விழுமியங்கள் மேலும் செழிப்புற்று வளர்ந்து வருகின்றன. வீரமும் - ஈகமும் நிரம்பிய எமது விடுதலைப் போராட்டத்திற்கு உள்ளிருந்து பலம் சேர்க்கும் அகக் காரணிகளாகவும் இவை விளங்கி வருகின்றன.



இதேசமயம், இனப்பற்றை அடித்தளமாகக் கொண்ட தேசிய எழுச்சி மற்றும் இலட்சிய உறுதி என்பன அடங்கிய அரசியல் பிரக்ஞை; ஈழத்தமிழர்களின் பண்பாட்டு அம்சமாக உருவெடுத்து அவர்களிடம் மாபெரும் மனப் புரட்சியையும் உண்டு பண்ணி வருகின்றது.

தமிழர்களிடம் ஏற்பட்டுள்ள சக்திவாய்ந்த இந்த சமூக பலத்தைச் சிதைக்க சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் விரும்புகின்றனர்.

போர்மூலமும் - அடக்குமுறை நடவடிக்கைகள் மூலமும் நசுக்க முடியாமல் போன தமிழரின் விடுதலைப்போரை, சமூகச் சீரழிப்புமூலம் சாதிக்க சிங்களப் படைகள் எத்தனிக்கின்றன.

சிங்களப்படைகள் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியில், ஆக்கிரமிப்பாளர்கள் அனைவரும் விடுதலைப் போர்களை ஒடுக்க கையிலெடுக்கும் கடைசி ஆயுதம் இந்த சமூகச்சீரழிப்பு முயற்சிதான்.

சிங்களப்படைகளின் ஆக்கிரமிப்பிற்குள் உள்ள தமிழர் பிரதேசங்களில், அண்மைக்காலமாக, சமூகக் குற்றங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன.

கொலை - கொள்ளை - குழுச்சண்டைகள் - பாலியல் குற்றங்கள் போன்ற தீங்கியற் செயற்பாடுகள் நடைபெறாத நாட்களே இல்லை எனும் அளவுக்கு சமூகக் குற்றங்கள் பெருகியுள்ளன.

இக் குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்த அங்குள்ள சிங்களப் பொலிசார் முயற்சிகள் எடுப்பதில்லை. மாறாக, குற்றவாளிகளுக்கு அனுசரணையாக இருந்து சமூக ஒழுங்கு சீர்குலைவதற்கு ஒத்தாசை புரிந்து வருகின்றனர்.

இலஞ்சமும் - ஊழலும் நிறைந்த சிங்களப் பொலிஸ் கட்டமைப்பின் இயலாத்தனம் என்ற எல்லைக்கும் அப்பால் இவை, திட்டமிட்டு ஊக்குவிக்கப்படும் சீர்குலைப்புச் செயல்களாகவே உள்ளன.

தமிழரின் இன ஒற்றுமையையும் - அவர்களது சமூக வாழ்வின் மையமாகவும் திகழும் ஒழுக்க விழுமியத்தைக் குலைத்து சமூகக் குழப்பங்களை ஏற்படுத்தும் சதிச்செயல்களாகவே இவற்றை நாம் கருதுகின்றோம்.

இத்தகைய சமூகக் குழப்பத்தின் மூலம் சிங்களப்படைகள் தமது ஆக்கிரமிப்புப் பிடியை இறுக்க முனைகின்றனர்.

தமிழ் இளைஞர்கள் - யுவதிகள் மத்தியில் ஆபாசப் படச்சுருள்களை பரப்புவதில் படையினரே முன்னணியில் திகழ்கின்றனர். படையினர்க்கு அடிவருடிகளாக இருக்கும் சில நபர்கள் தென்னிலங்கையில் இருந்து இந்த ஆபாச இறக்குமதிகளைச் செய்வதற்கு படையினருக்குத் துணைபோகின்றனர். அதேவேளை, வீடியோ படநாடக்களை வாடகைக்கு விடும் சில வியாபாரிகளும் தெரிந்தோ - தெரியாமலோ இச்சமூகச் சீரழிப்புக்கு உதவிபுரிகின்றனர்.

மதுபானம் - சிகரெட் விற்பனைகள் என்றுமில்லாத அளவுக்கு படையினரின் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் அதிகரித்துள்ளன. கசிப்பு உற்பத்தி படையினரின் ஊக்குவிப்புடன் அமோகமாக நடைபெறுகின்றது. படையினரின் பல காவல் அரண்கள் கசிப்பு விற்பனை நிலையங்கள் போன்றே செயற்படுகின்றன.

இத்தகைய சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் நபர்களும் - ஆபாசப் பிரியர்களும் படையினரின் நண்பர்களாக மாறிவருக்கின்றனர். இவர்களை காட்டிக் கொடுப்பிற்காகவும், நாசவேலை நடவடிக்கைகளுக்காகவும் படையினர் பயன்படுத்தி வருகின்றனர்.

இவை ஆபத்தான அம்சங்களாகும். ஒருபுறம் எமது இளைஞர் - யுவதிகளின் வாழ்க்கை சீரழிவுக்குள் செல்வதுடன் மறுபுறம் எமது விடுதலைப்போராட்டத்தின் வீரியமும் மழுங்கடிக்கப்பட வாய்ப்புகள் உண்டு. எனவே, இத்தகைய சமூகச் சீரழிவுக்கு காரணமான விடயங்களில் எமது மக்கள் மிகவும் அவதானமாகவும் - எச்சரிக்கை உணர்வுடனும் இருக்கவேண்டும்.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகி புலிவீரர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அரசியல் வேலை செய்யச்சென்ற சமயம் இத்தகைய சமூகச் சீரழிவுக்கு அவர்கள் ஆப்பு வைப்பார்கள் என்று மக்கள் நம்பினர்.

ஆரம்பத்தில் மக்களின் ஒத்துழைப்புடன் ஏராளமான ஆபாசப் படச்சுருள்களை அம்பலத்திற்குக் கொண்டுவந்த புலிகள் அவற்றை மக்கள்முன் எரித்தழித்தனர். அதேபோல கசிப்பு உற்பத்தியிலும் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தனர். ஆயினும் இவற்றை மக்கள் எதிர்பார்த்ததுபோல முழு அளவில் செய்ய முடியவில்லை. போர்நிறுத்த ஒப்பந்தக் கடப்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்தன.

புலிகளின் முழுமுரமான நடவடிக்கைகளுக்கு எதிரான சட்டச் சிக்கல்களும் இருந்தன. ஆரம்பத்தில் சில குற்றவாளிகளை சிங்களப் பொலிசாரிடம் புலிகள் கையளித்தனர். ஆயினும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்காத பொலிசார் அவர்களை விடுதலை செய்தனர். புலிகளிடம் வந்த பல முறைப்பாடுகளை சிங்களப் பொலிசாரிடமே திருப்பிவிட்டிருந்தனர். அவற்றிற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை.

சமூகக் குற்றங்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டுமாயின் சட்டம் - ஒழுங்கை செயற்படுத்தும் அதிகாரம் இருப்பது முக்கியம். அரசியல் வேலை செய்யச்சென்ற புலிவீரர்களிடம் அத்தகைய அதிகாரம் இருக்காததால் குற்றங்களுக்கெதிரான பிரச்சாரம் - விழிப்புணர்வூட்டல் என்ற அம்சங்களுக்கு அப்பால் செயற்பட முடியாதிருந்தது. இதனால், இத்தகைய சமூகக் குற்றங்களை கட்டுப்படுத்த புலிகள் இயக்கத்தால் முடியாமல் போனது.

இதற்கு மாறாக, புலிகளின் நேரடி நிர்வாகம் செயற்படும் விடுவிக்கப்பட்ட நிலத்தில் இத்தகைய சமூகக் குற்றங்கள் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றன. சட்டம் - ஒழுங்கு பேணி சமூக அமைதியை ஏற்படுத்தியுள்ள விடயத்தை இங்கே பணிபுரியும் பல சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் புகழ்ந்து - பாராட்டியுள்ளன.

**- எல்லாளன் -**

எனவே, எமது நிலம் சிங்களப்படையினரின் ஆக்கிரமிப்பிற்குள் இருந்து பூரணமாக விடுவிக்கப்படும் போதுதான் சமூகச்சீரழிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தமுடியும்.

போர் - இடப்பெயர்வு போன்ற சமூகப் பிரளயங்களால் ஏற்படும் உளவியல் எதிர்வினைகளை போராட்டத்திற்கு எதிராக திசைதிருப்பிவிட ஆக்கிரமிப்பாளர்கள் முயல்வார்கள். அவர்களின் சதி முயற்சிக்குள் வீழ்ந்து - போராட்ட உணர்வுகளைப் பலவீனப்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மக்களின் தலையாய பணியாக உள்ளது.

சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்பிற்குள் உள்ள பல பகுதிகளில் இத்தகைய சமூகச் சீரழிப்புக்கு எதிரான பல விழிப்புக் குழுக்களை மக்கள் நிறுவி வருகின்றனர். காத்திரமான பல வேலைத்திட்டங்களை இந்த மக்கள் குழுக்கள் நிறைவேற்றி வருவது பாராட்டத்தக்கது. இத்தகைய குழுக்கள் மூலம் மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வுகளை ஊட்டி சமூகக் குற்றங்களுக்கு ஒரு வரம்பிடமுடியும்.

தமிழரின் விடுதலைப் போராட்டம் இன்று உச்ச நிலையை அடைந்துள்ளது. சர்வதேசத்தின் முழுக் கவனத்திற்கும் எமது போராட்டம் உட்பட்டுள்ளது. சமூக ஒழுக்கம் - அதன்மூலம் பெறப்படும் ஒற்றுமை உணர்வும் இன்றைய காலகட்டத்தின் அவசியமாக உள்ளது. சமூகச் சீரழிப்புக்கள் - நாச வேலைகளுக்கு இடம்கொடாது எமது தேசிய பலத்தை மேலும் வளர்த்துச் செல்லவேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும். ●

> போர் – இடப்பெயர்வு போன்ற சமூகப் பிரளயங்களால் ஏற்படும் உளவியல் எதிர்வினைகளை போராட்டத்திற்கு எதிராக திசைதிருப்பிவிட ஆக்கிரமிப்பாளர்கள் முயல்வார்கள். அவர்களின் சதி முயற்சிக்குள் வீழ்ந்து – போராட்ட உணர்வுகளைப் பலவீனப்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மக்களின் தலையாய பணியாக உள்ளது.



www.eelamview.com

# சமாதானம் : மேற்குலகமும் ஏமாற்றப்படுகிறது பலியிடப்படுவது தமிழர் மட்டும்தான்

சமாதானத்திற்கான கரங்கள் அடிப்பவனைத் தடுப்பதிற்தான் உயர வேண்டுமே தவிர அடிக்கப்படுபவனைப் பிடிப்பதிலல்ல.

ஒடுக்கப்படும் ஓர் இனம் நீதி, நியாயத்தை நிலைநாட்டுவதற்காகவும், குறைந்தபட்சம் அடிப்படை மனித உரிமைகளை அனுபவிப்பதற்காகவும் அதிக விலைகொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையே இன்றைய சர்வதேச ஒழுங்கின் யதார்த்தமாய் உள்ளது.

இருபெரும் சிங்கள அரசியற் கட்சிகளினதும் உள்நாட்டு அரசியல் நிலவரப்படி சமாதானத்திற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவானதென்பதே உண்மை. இருபெரும் கட்சிகளையும் பொறுத்தவரை சமாதானம் என்பது நிதி பெறுவதற்கான ஒரு ஆயுதம் அல்லது பதவியிலிருப்பதற்கான ஒரு வழி அல்லது தமிழர்களை ஏமாற்றுவதற்கான ஒரு மார்க்கம். எனவே சமாதானத்தைக் குழப்பினால் அல்லது சமாதானத்தை எந்தக் கட்சியாவது குழப்பினால் இலங்கைக்கு நிதியுதவி இல்லையென்ற அழுத்தத்தையும் அதற்கு நிகரான வற்புறுத்தல்களையும் சர்வதேச சமூகம் மேற்கொள்ளுமிடத்து இவ்விரு கட்சிகளும் சமாதானத்திற்கெதிராகச் செயற்படும் வாய்ப்புகள் குறையுமுடியும்.

இவ்விருபெரும் கட்சிகளும் தமது உள்நாட்டு அரசியலை அதிகம் வெளிநாடுகளைப் பயன்படுத்துவதன் மூலமே செய்கிறார்கள். கொழும்பு எப்பொழுதும் இந்தவகையில் வெளிநாடுகளைக் கவர்ந்து தமிழருக்கெதிரானதொரு அரசியல் வியூகத்தை வடிவமைக்கிறது. அப்படிப் பார்க்குமிடத்து இது விடயத்தில் சர்வதேச சமூகத்தின் பொறுப்பு அதிகமென்பதே உண்மை.

இந்த வகையில் வெளிநாடுகளை கொழும்பு கையாண்டவிதம் பற்றிய ஒருசில உதாரணங்களைப் பார்ப்பது அவசியம். இருபெரும் கட்சிகளாகிய ஐ.தே.கவும் சு.கவும் ஏறக்குறைய சமபலம் பெற்றிருப்பது இத்தகைய கையாளலை அதிகம் இலகுவாக்கிவிடுகிறது. இத்தகைய கையாளல்களின்போது வெளிநாடுகள் கொழும்பைத் திருப்திப்படுத்த எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் இறுதியில் பலியாவது ஈழத் தமிழர்கள்தான். இவ்விரண்டையும் இணைத்த சில உதாரணங்களை மட்டும் நோக்குவோம்.





**— இங்கு யாப்பைப்பற்றி பேசுவதெல்லாம் சர்வதேச சமூகத்திற்கு மண்ணைத்தூவும் ஒரு நடவடிக்கைதான். இந்த இடத்தில் இருபெரும் அரசியல் கட்சிகளும் தமக்குள் போட்டியிட்டு சாதிப்பது ஒரு விடயத்தைத்தான். அது தமிழர்களைப் பலியிடுவதுதான். அதாவது ஒருவரையொருவர் சாட்டி இருவரும் சர்வதேச் சமூகத்தையும் தமிழரையும் ஏமாற்றி இறுதியில் தமிழரை பலியெடுத்துவிடுகிறார்கள். —**

1947ஆம் ஆண்டு உருவான அரசியல்யாப்பு தமிழரின் முழு எதிர்ப்பிற்கு உள்ளாகிய ஒன்று. ஆனால், கட்டுநாயக்கா விமானத்தளத்தையும் திருகோணமலை துறைமுகத்தையும் பிரித்தானியர் தமக்குத் தளமாகப் பெறும் நோக்கத்துடன் சிங்களத் தலைவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அந்த யாப்பை வடிவமைத்தனர். பிரித்தானியருக்குத் தளம்கொடுத்து தமிழருக்கெதிரான யாப்பு உருவாக்கப்பட்டுவிட்டது.

ஆனால், 1956ஆம் ஆண்டு பதவிக்கு வந்த திரு.பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக்கட்சி தளத்தை அகற்றிவிட்டு அந்த யாப்பைப் பேணியது. அத்துடன் அந்த யாப்பில் சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கென இருந்த ஒரு சிறிய ஏற்பாடாகிய 29 ஆவது சரத்தைக்கூட எந்த வகையிலும் பொருட்படுத்தாமல் அதனைமீறி தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியது.

இதிலுள்ள துயரமான விடயம் என்னவென்றால் முதலில் பிரித்தானியருக்குத் தளம்கொடுத்து தமிழருக்கெதிரான யாப்பைப் பெற்றுவிட்டு பின்பு தளத்தை நீக்கியபோது அந்தப் பிழையான யாப்பை அப்படியே பேண முடிந்ததுடன் மேலும் அந்த யாப்பை மீறியும் தமிழருக்கெதிரான சட்டத்தைக் கொண்டுவந்தனர். இந்த இடத்தில் வெளிநாட்டைப் பயன்படுத்தி தமிழர்கள் பாதிக்கப்பட்டவிதம் ஒரு தெளிவான உதாரணமாகும்.

சோல்பரி யாப்பை உருவாக்கிய சோல்பரி பிற்காலத்தில் திரு.சி.சுந்தரலிங்கத்திற்கு எழுதிய கடிதங்களில் தான் திரு.D.S.சேனநாயக்காவை நம்பியே அந்த யாப்பை உருவாக்கியதாகவும் தான் அதில் தமிழருக்கு தவறிழைத்து விட்டதாகவும் அதில் ஒப்புக்கொண்டுள்ளார். இக்கடிதங்கள் 1964ஆம் ஆண்டு சுந்தரலிங்கத்தால் வெளியிடப்பட்ட EYLOM:Beginning of freedom struggle என்ற அவரது நூலில் உள்ளன. பின்பு பேராசிரியர் டீ.ர்.பாமரால் எழுதப்பட்ட பிளவுபட்ட இலங்கை என்று பொருள்படும் நூலிற்கு எழுதிய முன்னுரையில் தான் இந்த யாப்பை உருவாக்கியதில் விட்ட தவறுபற்றி ஒருவகை ஒப்புதல் செய்துள்ளார்.

ஆனால் இந்தத் தவறுகளில் பலியானதும் தொடர்ந்து பாதிக்கப்படுவதும் சோல்பரியுமல்ல பிரித்தானியுமல்ல தமிழர்கள்தான்.

அடுத்து 1987ஆம் ஆண்டு திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இந்தியாவை அழைத்து தமிழர் விரும்பாத ஒப்பந்தத்தைச் செய்தார். ஒருபுறம் அவர் ஒப்பந்தத்தை ஆதரிப்பதாக ஓரளவு காட்டிக்கொண்டபோதும் அவரின் ஏனைய அமைச்சர்கள் பலர் ஒப்பந்தத்தை எதிர்ப்பதான இன்னொரு நிலைப்பாட்டை எடுத்தனர். இதில் ஜே.ஆர் தான் கையாலாகாமல் நிற்பது போன்ற ஒரு நிலைப்பாட்டை வெளிக்காட்டிக்கொள்ள அவரது பிரதான அமைச்சர்களுள் ஒருவரான திரு.லலித் அத்துலத்முதலி ஒப்பந்தத்தை மீறி இந்தியாவின் விருப்பத்தையும் மீறி விடுதலைப்புலிகளின் முன்னணிப் போராளிகளைக் கைதுசெய்து கொழும்பிற்கு எடுத்துச்செல்ல முற்பட்டபோது ஒப்பந்தம் முறிந்தது வேறுவிடயம். இவ்வாறு இந்தியாவுடன் தாங்களே ஒப்பந்தம் செய்து இறுதியில் தாங்களே ஒப்பந்தத்தையும் மீறி இந்தியாவையும் சிக்கலிற்குள் மாட்டிவிட்டார்கள். இறுதியில் தமிழருக்கெதிரான ஒரு பெரும் யுத்தத்தினை இந்தியாவின்மூலம் நடாத்தினர். இதிலும் கொழும்பு ஒரு வெளிநாட்டை தனக்குச் சாதகமாகவே பயன்படுத்திக்கொண்டது. கொழும்பின் இக்கையாளல்களில் பாதிப்பிற்குள்ளானது தமிழ்மக்களே.

இப்போது திரு.ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அதிகம் சர்வதேச சமூகத்தை தன்பால் கவர்ந்து தன் அரசியல் இலாபங்களைத் தேட முயல்கிறது. இதிலும் தமிழர்களே பகடைகளாக வைக்கப்பட்டிருக்கின்றனர். நிதிபெறச் சமாதானம் என்பதே இப்போதைய அரசாங்கத்தின் கொள்கை. பொதுவாக நிதி வழங்கும் நாடுகள் பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்கவின் இந்த சமாதான கோசத்தை அதிகம் கவர்ச்சிகரமாக நோக்குகின்றனர். அத்துடன் ரணில் அரசாங்கம் நிதி வழங்கும் நாடுகளிற்கு அதிகம் மனதிற்குகந்த அரசாங்கமுமாகும். இப்பின்னணியில் ரணில் விக்கிரமசிங்கவின் பலம் சர்வதேச அரங்கில் அதிகம் வலுவாக உள்ளது. உள் நாட்டில் நாடாளுமன்றக் களத்தில், அரசியல் களத்தில் பெரும் பலமற்றிருக்கும் ரணில் இலங்கைக்கு நிதி பெற்றுக்கொடுக்கக்கூடிய ஒரு காமதேனுவாக காட்சியளிப்பதால் உள்நாட்டரசியலிலும் அவர் தவிர்க்க முடியாத சக்தியாக உள்ளார்.

அப்படியென்றால் ரணிலின் பலம் வெளிநாட்டு நிதியாலும் உதவி வழங்கும் நாடுகளாலும் ஏனைய முக்கிய உலக நாடுகளாலுமே நிலைநிறுத்தப்படுகிறது. இந்நிலையில் ரணிலை வீழ்த்த வேண்டுமென்றால் அவரை சர்வதேச வலைப்பின்னலிலிருந்து அறுப்பதன் மூலமே வீழ்த்தவேண்டும் என்பதே ஜனாதிபதியாக இருக்கும் திருமதி. சந்திரிகாவினதும் அவரது கட்சியினரதும் கொள்கை.

1950களின் மத்தியில் ஐ.தே.கவை வீழ்த்துவதற்கு பண்டாரநாயக்கா வகுத்த பிரதான கொள்கை என்னவெனில் ஐ.தே.கவின் பலம் மேற்குலக ஆதரவென்றும் அந்த ஆதரவினை அறுத்து வீழ்த்தினால் ஐ.தே.க வீழும் என்பதுமே. அவ்வாறு அறுத்ததன் மூலம் தான் அவர் ஐ.தே.கவை வீழ்த்தினார். சு.கவும் இப்போது அப்படித்தான் சிந்திக்கின்றது. அதாவது நிதி வழங்கும் நாடுகளின் ஆதரவையும் மேலும் மேற்குலக நாடுகளின் அனுசரணையையும் அறுப்பதன்மூலம் ரணிலை வீழ்த்தலாம் என்பதே.

பனிப்போர் நிலவிய காலத்தில் ஐ.தே.கவை மேற்படி முறையில் வீழ்த்துவது பண்டாரநாயக்காவிற்கு சாத்தியப்

(12ம் பக்கம் தொடர்ச்சி.)



www.eelamview.com

# “நீங்கள்தான் புலிகளா?”

— அ.தீபன் —

தமிழர் தாய்நிலமெங்கும் ஆக்கிரமிப்புப்படை வெள்ளம் அலைபுரண்டோடியதுபோல் சென்றமாதம் தென்னிலங்கை நகரங்களையும், கிராமங்களையும் மழைவெள்ளம் ஆக்கிரமித்துக்கொண்டிருந்தது. சற்றும் எதிர்பாராது நடந்த அந்தப் பெரும் துயரத்தில் தங்களுடையதெல்லாம் அள்ளுண்டுபோக செய்வதறியாது நீர்க்கதியாய் நின்றனர் அந்த மக்கள்.



நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தும், உறவுகள் பிரிக்கப்பட்டும், சொத்துக்கள் அழிக்கப்பட்டும் இருந்தபோது வடபகுதியின் ஏழைக் கிராமங்களிலும், பட்டிணங்களிலும், நகரங்களிலும்தான் அந்தத் துயரம் முதலில் உணரப்பட்டது. ஒலிபெருக்கி வாகனங்கள் தென்னிலங்கை மக்களுக்காக வீதிகளில் நின்று உதவிகோரி அழைத்தன. உள்ளூர் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் வீடு வீடாகச்சென்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவிப் பொருட்களை சேகரிக்கத் தொடங்கினர்.

உண்மையில் வியப்பாகத்தான் இருந்தது. துன்பத்தில் உழன்ற அந்த மக்களுக்கு உதவிட எமது மக்கள் அத்தனை ஆர்வம் காட்டினர். கிளிநொச்சியில் தனது சிதைவுண்ட வீட்டின் ஒரு பகுதியை சீரமைப்பதற்கான திட்டத்தோடிருந்த ஒரு ஏழை விவசாயி உடனடியாகவே ஐந்து நெல் மூடைகளை வழங்கினார். பளைநகரில் இடியுண்டு போயிருந்த தனது அரிசியாலையை அப்போதுதான் சீரமைத்து இயக்கத்தொடங்கிய ஒருவர் பதினைந்து அரிசி மூடைகளை வழங்கினார். இவ்வாறு அச்செய்தியை அறிந்த எல்லா மக்களுமே தம்மால் இயன்ற உதவிகளை வழங்கினார்கள்.

தமது மக்கள் தமது இதயக் காணிக்கையாக வழங்கிய அந்த நிவாரணப் பொருட்களை எடுத்துக்கொண்டு விடுதலைப்புலிகளின் குழுவொன்று தென்னிலங்கை நோக்கிப் புறப்பட்டது.

வரலாற்றில் முதல் தடவையாக இப்படியொரு சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு உதவக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்துகொண்டோம்.

தென்னிலங்கையில் எம் வரவையறிந்த எல்லோரும் மெய்சிலிர்த்துப் போனார்கள். தங்களது அவலமறிந்து முதலில் ஓடோடிவந்த பாதங்கள் தமிழர்களுடையவை என்றறிந்ததும், அதுவும் புலிகளுடையவை என்றறிந்ததும் அவர்கள் தமது அவலங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக மனம் குளிர்ந்து இருந்தார்கள்.

எமது நிவாரணக் குழுவினர் முதலில் களுத்துறைக்குச் சென்றபோது அங்குள்ள மக்கள் மிகவும் சோர்வுற்று இருந்தார்கள். படகுகளில் பயணித்து அவர்களுக்குரிய உணவுப் பொருட்களை வழங்கியபோது முதலில் அவர்கள் எம்மை அறியும் ஆவலில் இருக்கவில்லை. பின்னர் விடுதலைப்புலிகள் வந்திருக்கிறார்கள் என்ற செய்தி காட்டுத் தீபோல் பரவியபோது அவர்கள் எமது போராளிகளைச் சூழ்ந்து படையெடுக்கத் தொடங்கிவிட்டார்கள். எமது போராளிகளோடு கதைப்பதில் பலரும் முண்டியடித்துக்கொண்டிருந்தார்கள். தம்மால் காணவே முடியாதென நினைத்திருந்த தமது உறவுகள் திடீரென கண்முன் தோன்றியதுபோன்ற மகிழ்வுடன் அவர்கள் காணப்பட்டார்கள். தம்மை நம்பமுடியாதவர்களாக, எமது போராளிகளின் அடையாள அட்டைகளைப் பார்த்து தம்முடன் நிற்பது உண்மையில் விடுதலைப்புலிப் போராளிகள்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். போராளிகளின் கரங்களைப் பற்றி அவர்களோடு புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். சிறுவர்கள் தமது குறிப்புப் புத்தகங்களில் எம்மை ஏதாவது எழுதச்சொல்லி அடம்பிடித்தார்கள். உண்மையில் அப்போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சி அவர்களது துன்பங்கள் எல்லாவற்றிலும் மேலானதாக இருந்தது.

எம்மை அறிந்துகொள்வதிலும் புரிந்துகொள்வதிலும் அவர்கள் அதிக ஈடுபாடுகாட்டத் தொடங்கினர். எமது மக்களின் சோகக் கதைகளை அறிவதில் ஆர்வம் காட்டினர். ஒரு வயது முதிர்ந்தவர் எங்களிடம் இப்படிச் சொன்னார். “தம்பி இவ்வளவு காலமும் தமிழர்கள் வருவதென்றால் ‘பயங்கரவாதிகள’ என்ற பட்டத்துடன் ஆடு மாடுகள்போல் அடைக்கப்பட்ட வாகனங்களில் இங்குள்ள சிறைச்சாலைக்குத்தான் கொண்டுவரப்படுவார்கள். ஆனால் இன்று எங்களின் நிலையறிந்து ஓடோடி வந்திருக்கிறீர்கள் எனும்போது எங்களுக்கு எவ்வளவு குற்ற உணர்வாய் இருக்கிறது” என்று. இவ்வாறே பாதிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளிலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மிகுந்த ஆவல் ததும்ப போராளிகளை வரவேற்றார்கள்.
எமது போராளிகளுக்குக் கிடைத்த இந்த உணர்வு பூர்வமான வரவேற்பால் அதிர்ந்துபோன இனவாத சக்திகள்சில மக்களைத் திரட்டித் தமது எதிர்ப்பைக்காட்ட முயன்றபோதும் தோற்றுப்போயிருந்தனர். எமது போராளிகளுடன் உரையாடி மகிழ்வதில் அந்த மக்கள் கொண்டிருந்த விருப்பை எவராலும் தடுத்துவிட முடியவில்லை. பொது இடங்களில் கூடிய மக்கள் எமது போராளிகளை உரையாற்றும்படி கேட்டனர். பௌத்த பிக்குகள் தொடர்புகொண்டு தம்மைச் சந்திக்க வரும்படி கோரினர்.

தமிழ்மக்களின் போர்வாழ்வு பற்றியும் சிங்களப் பேரினவாதம் அவர்கள்மீது திணித்த அவலங்கள் பற்றியும் அறிந்தபோது அவர்கள் அவற்றிற்காக மிகவும் துன்பப்பட்டார்கள். “நீங்கள் கொடிய பயங்கரவாதிகள் என்பதைத் தவிர வேறு எதனையும் எங்களுக்கு எவரும் சொல்லவில்லை”. என்று அவர்களில் பலரும் கூறினர்.

“உண்மையில் உங்களை இப்படியான கனிவுள்ள முகங்களில் நாங்கள் என்றைக்குமே கற்பனை செய்ததில்லை” என்றார்கள் அவர்கள்.

சிங்கள மக்களின் மனங்களை வெல்வதற்காக அரசியல் தலைவர்கள் தமிழ்மக்கள் மீது மாறிமாறிப் படையெடுத்தபோது ஏற்பட்ட அவலங்கள் பற்றி போராளிகள் சொன்னபோது ஒரு சிங்களத்து அமைச்சர் தனது மக்களிடம் தளதளத்த குரலில்




பின்வருமாறு சொன்னார். “தமிழ்மக்கள் இத்தனை காலமும் எவருக்கும் தெரியாது வடித்த கண்ணீர்தான் இப்போது வெள்ளமாக எங்கள் கிராமங்களுக்கு வந்துவிட்டதோ என்றுதான் நான் ஏங்குகிறேன்” என்று அவர் உரையாற்றியபோது மண்டபம் அமைதியாய் இருந்தது.

உரையை முடித்துக்கொண்டு வெளியே வந்த போராளிகளைச் சூழ்ந்து நின்றவர்களில் மூதாட்டியொருவர் எம்முடன் தொடர்பு கொள்வதற்கான முகவரியைக் கேட்டறிந்துவிட்டு “எங்கள் பிள்ளைகளின் உயிர்களைக் கொடுத்து உங்கள் ஊர்களில் நாங்கள் இதைத்தானா செய்வித்தோம்?” என்று மன வெம்மையுடன் கூறினார்.

இவ்வாறு, மலையகப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களிடம் சென்றபோது சிறிலங்காப் பொருளாதாரத்தின் முதுகெலும்பான அந்த ஏழை உழைப்பாளிகள் எமது போராளிகள் பற்றியும் தலைவர் பற்றியும் வெளிப்படுத்திய உணர்வுகள் அங்கு சென்றிருந்த போராளிகளை உணர்ச்சிகளால் நிறைத்தன.

இறுதியில் அந்த நீங்காத நினைவுகளுடன் திரும்பியபோது, எங்கள் எல்லோர் மனங்களிலும் அந்த உன்னதமான நினைவுகள் நிறைந்திருந்தன. எம்மைப்போலவே அந்த ஏழைக் கிராமத்து சிங்கள மக்களும் கொடிய போரில் வெறுப்புற்று இருக்கிறார்கள் என்ப[illegible]து நிம்மதியைத் தந்தது. தங்கள் வீடுகளில் இருந்து புறப்பட்ட புதல்வர்களை வைத்து தமது ஆட்சியாளர்கள் சாதித்தவைகள் பற்றிய உண்மைகளை அறிந்துவிட்டபோது அவர்களால் மேலும் அதனை வெறுக்காமல் இருக்க முடியவில்லை. ●

---



## வழித்தடம்

அது ஓர் இக்கட்டான காலப்பகுதி. எங்கோ ஓரிடத்தில் எதிரி தொடர்ச்சியாக முன்னேற முயன்று கொண்டிருந்தான். பிரதானமாக எதிரி இரண்டு களமுனைகளைத் திறந்திருந்தான்.

‘ஜயசிக்குறுய்’ களமுனைகளில் மாங்குளம் சந்தியைநோக்கி ஒரு களமுனையை எதிரி திறந்திருந்தான்.

மாங்குளம் சந்தியைக் கைப்பற்றுவது அந்தக் களமுனையின் உடனடி இலக்காக இருந்தது. மாங்குளத்தின் வடக்கே கிளிநொச்சிப் பகுதியிலிருந்து எதிரி தனது இரண்டாவது கள முனையைத் திறந்திருந்தான். 1998இன் பெப்ரவரி மாதம் எம்மால் கைப்பற்றப்பட்ட கிளிநொச்சி நகரப் பகுதியின் சில பிரதேசங்களை ஆக்கிரமிப்பது, குறிப்பாக ‘டிப்போ’ சந்தியைப் பிடிப்பது கிளிநொச்சியிலிருந்து முன்னேறமுயலும் இராணுவத்தின் உடனடி இலக்காகவிருந்தது.

உண்மையில் இந்தக் காலப்பகுதியில் நாம் மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்தோம். எதிரியின் நகர்வை ஒரு நீண்ட பிரதேசத்தினூடு எதிர்பார்த்தோம். அன்றைய எமது வலுவிற்கு அப்பாற்பட்டதாகவே அந்தக்கடமை எம் போராளிகளுக்கு இருந்தது. எனினும், எம் ஒவ்வொரு போராளியினதும் மன உறுதியாலும் தியாகத்தாலுமே நாம் இவ்வாறான நீண்ட பிரதேசத்தை காத்தோம். எமது போராளிகளின் அசைக்கமுடியாத உறுதியே எம்மைவிட பலமடங்கு அதிகமான எண்ணிக்கையில் எம்முடன் மோதவந்த இராணுவத்தை எதிர்த்து எம்மை வெற்றிகரமாகப் போர்செய்ய வைத்தது

08-06-1998 காலைப் பொழுது. நான்கு நாட்களின் முன்னர் 04-06-1998இல்தான் எதிரி ஒரு நகர்வை கிளிநொச்சியின் டிப்போசந்தியை நோக்கி செய்யமுயன்று எம்மிடம் அடி வேண்டித் திரும்பியிருந்தான். மீண்டும் அதே இலக்கு நோக்கிய ஒரு நகர்வை தொடங்கினான்.

எதிரி மீண்டும் டிப்போச் சந்தியைப் பிடிப்பானாயின், எமது போர்ச்செயற்பாடுகள் சிக்கலடையும் அபாயம் உணரப்பட்டது. முன்னேறிய எதிரியை அடித்துக் கலைக்க வேண்டியதேவை அவசியமானது.

பலத்த எறிகணை வீச்சுக்கு மத்தியில் ராங்கிகளின் பக்கபலத்துடன் எமது முன்னணி நிலைகளை உடைத்துக்கொண்டு எதிரி முன்னேறினான்.

அவசர அவசரமாக ஓர் ஊடறுப்பு அணி தயார் செய்யப்பட்டு, முன்னேறிய எதிரி, முகாமுடன் இருந்த எதிரியிலிருந்து துண்டாடப் படுகின்றான். புலிகள், துண்டாடப்பட்ட எதிரியின்மீது தமது ஆக்ரோசமான தாக்குதலை தொடங்கினர்.

இசைவீரன். அவன் அங்கே புதியவன். எல்லோரிலும் சிறியவன். எனினும், ஊடறுத்த அணியுடன் அவனும் அன்று களத்தில் நின்றான்.

தாக்குதல் உக்கிரம் அதிகரிக்க, நிலைகுலைந்த எதிரி சிதறிய பட்டியமாடென செத்தவர், காயப்பட்டவரை அப்படியே விட்டுவிட்டு முகாம் நோக்கி ஓடத்தொடங்னான். இப்போது முன்னேறியவர்கள்மீது நடாத்தப்பட்ட தாக்குதல் பின்வாங்கி ஓடுபவர்களைத் தடுத்துநிறுத்தி நடாத்தப்படும் தாக்குதலானது.

ஆம். ஏற்கனவே ஊடறுப்பை மேற்கொண்ட அணியினர் அங்கே சிதறி ஓடிவரும் படையினரை எதிர்பார்த்திருந்தனர். படையினர் நெருங்க நெருங்க நிலைகளுள் இருந்த புலிகளின் துப்பாக்கிகள் தீ உமிழத்தொடங்கின.

எனினும், எதிரி எமது அரண்களைத்தாண்டி தன் முகாமிற்கு திரும்பி ஓடுவதிலேயே குறியாய இருந்தான். எம் வீரர்கள் சுடச்சுட அவன் விழவிழ ஓடிக்கொண்டேயிருந்தான்.

இறுதியாக எதிரி பின் வாங்கி ஓடிய பாதையில் பார்த்தபோது துப்பாக்கிச் சூடுகளால் சல்லடையாக்கப்பட்ட உடலுடன் அந்தச் சிறிய போராளியின் பதுங்கிச் சுடும் துப்பாக்கி ரவையேதுமற்ற நிலையில், தன் முன்னால் செத்துக் கிடந்த சிங்களச் சிப்பாய்களின் முடிவிற்கான காரணத்தை கூறுவதாய் இன்னும் அவனது கரங்களால் இறுக அணைக்கப்பட்டவாறு இருந்தது.

இசைவீரன், அவன் இறுதி வரை தனியொருவனாக தன்னை நோக்கிவந்த எதிரிகளை சுட்டு, இறுதியில் ரவையேதுமற்ற நிலையில் தன் நிலையிலிருந்து பின்வாங்காமல் வீரச்சாவடைந்திருந்தான். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கு புதியவனான அந்தப் போராளியின் மனோதிடம், இறுதிவரை அவனிடம் உயர்ந்திருந்த உறுதி வரலாற்றில் அவனை உயர்த்தி நிற்கும். •





www.eelamview.com

# வெகுதொலைவில் இருக்கிறது




# யுத்தத்திற்குத் திரும்பவியலாத கட்டம்

1994 இல் சந்திரிக்கா அரசாங்கத்துடனான பேச்சுக்களின் தோல்வியின்பின் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சு எனின் தாம் தயார் என புதிய நிலைப்பாட்டை புலிகள் முன்வைத்திருந்தனர்.

இலங்கைத் தீவில் அமைதி நிலவ வேண்டுமென்ற சர்வதேசத்தின் கரிசனையை மதித்தும் பேச்சு என்ற நாகரீகமான வழி முறையில் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற நோக்குடனும் அமைதிவழிப் பேச்சுக்குப் புலிகள் உடன்பட்டனர். அதனால் சர்வதேச நாடொன்றின் மத்தியஸ்தம் அவசியமானதென வலியுறுத்தினர்.

இலங்கை அரசுடனான கடந்தகால வரலாற்றில் சமாதானப் பேச்சுக்கள் தமிழ் மக்களுக்குத் தந்த கசப்பான, வலிமிக்க அனுபவங்களாலும் அப்பேச்சுக்கள் பற்றி ஒருதலையாக சர்வதேச அரங்கில் பிரச்சாரப்படுத்தக்கூடியவாறு அரசுக்கிருந்த வாய்ப்புக்களாலும் அதற்கு செவிமடுத்த சர்வதேச அங்கீகாரத்தாலும் மூன்றாம் தரப்பு இல்லாத இருதரப்புப் பேச்சு என்ற பாதையை புலிகளை நிரந்தரமாகவே மூட வழிவகுத்தது.

சமாதானத்தில் சிங்கள ஆட்சியாளர்களின் நேர்மை, நம்பகத்தன்மை என்பனவற்றின் மீதான சந்தேகங்களுக்கும் அப்பால் அதனைப் புறக்கணிக்கவேண்டிய அனுபவத்தை வரலாறு தமிழ்மக்களுக்குத் தந்துவிட்டது. எனவேதான் அமைதிவழித் தீர்வொன்றை நாடவேண்டுமாயின் புதிய வழியினை புலிகள் தேடவேண்டியவர்களானார்கள். இதுவே மூன்றாந்தரப்பு ஈடுபாடு என்ற புதிய வழிக்கு புலிகளை இட்டுச்சென்றது. அதில் சர்வதேசத்தின் பார்வையாய் சாட்சியாய் ஒருவர் விளங்குவார் என்பது தமிழ்மக்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய விடயம்.

இதனால் அமைந்த பேச்சுவார்த்தை இப்பிராந்தியத்துக்கு வெளியில், இப்பிராந்தியத்தில் நேரடி நலன்களற்ற நோர்வே என்ற மூன்றாம்தரப்பு ஈடுபாட்டுடன் நடக்கின்றது என்ற வகையில் மேலும் அதற்கு சர்வதேசத்தின் அபிப்பிராயத்தை பிரதிபலிக்கவல்ல வல்லரசுகளின் அனுசரணையும் ஆசீர்வாதமும் இருக்கின்றது என்ற வகையிலும் இம்முறை பேச்சு முயற்சி பலமான நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் அச்சத்திற்குப் பதிலாக ஆறுதலையும் தமிழ்மக்களுக்குத் தந்திருந்தது.

இப்பிராந்தியத்துக்கு வெளியில் இருதரப்பும் மூன்றாம் தரப்பை நாடுவதென்பது இலங்கை இனப்பிரச்சினையில் புதியவழி. பேச்சுக்கான யுத்தநிறுத்த ஒப்பந்தமும் சர்வதேச கண்காணிப்புக் குழுவும் பேச்சில் புதியமுறை பிராந்தியத்துக்கு வெளியில் பேச்சு நடப்பது புதிய அரங்கு இலங்கைத்தீவில் அமைதி நிலவ வேண்டுமென்ற சர்வதேச சமூகத்தின் ஒருமித்த கரிசனை என்பதும் புதியசூழல் இவையே சமாதானத்தை ஒளியூட்டின. கடந்த கால்நூற்றாண்டில் இதுபோன்று வேறெப்பொழுதும் தமிழர் சமாதானப் பேச்சை நம்பியதில்லை.

இத்தகையதொரு புறச்சூழலிலே தான் ஆரம்பப் பேச்சுக்களில் புலிகள் ஒப்பீட்டளவில் பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்திருந்தனர். தொண்ணூறு நாட்களில் உடன்பாடு நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும்சரி, இடைக்கால நிர்வாகம் 'சிரானா'க ஒப்புக்கொள்ளப்பட்டதும்சரி, புலிகளை விசனமூட்டும் பாரதூரமான யுத்த நிறுத்த மீறல்களைச் சகித்துக்கொண்டதும் சரி, மேலாக உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையில் ஒரு சமஷ்டித் தீர்வை பரிசீலிக்கத் தயாராக இருந்ததும்சரி இவையெல்லாம் இம்முறைப்பேச்சின் புதிய புறச்சூழல் தமிழ்மக்களுக்குத் தந்த நம்பிக்கையில் நிகழ்த்த வெளிப்பாடேயாகும்.

இதில் முக்கியமான அம்சம் விடுதலைப்புலிகளும் அரசும் பேச்சின் சம பங்காளிகள் என்றநிலை சர்வதேச அரங்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டமையே. இதுவே உள்நோக்கங்களற்ற பேச்சுமுயற்சி என்ற நம்பிக்கை ஒளியை தமிழ்மக்கள் மனங்களில் ஏற்படுத்தியது.

ஆனால், புலிகள் பங்கேற்கத்தக்க ஒருசூழல் ஏற்படுத்தப்படாதவிடத்து டோக்கியோ நிதி மாநாடு நடந்து முடிந்திருப்பதும் அதில் வழங்கப்பட்ட நிதியும் இந்த சமாதானத்தின் பயன்விளைவு குறித்து ஆழமாகவும் அர்த்தபூர்வமாகவும் தமிழ் மக்களை பரிசீலிக்க நிர்ப்பந்திக்கிறது.

கடந்த ஒன்றரைவருட சமாதானம் சர்வதேச நாடுகளின் ஆதரவையும் வரவேற்பையும் பெற்றிருந்தது. முன்னர் ஒஸ்லோவில் நடந்த மாநாடு 70 மில்லியன் டொலரை வடக்குகிழக்கு புனர்நிர்மாணத்திற்கென 'சிரான்' அமைப்புக்கு ஒதுக்கியது. மேலும் இலங்கைக்கான உதவி குறித்து இருதரப்பும் இணைந்து செயற்படுவது என்று எட்டப்பட்ட தீர்மானத்திற்கு சர்வதேச வரவேற்பும் கிடைத்தது. புலிகள் உள்ளக சுயநிர்ணயத்துடனான சமஷ்டி முறையை பரிசீலிக்கத் தயார் என்று அறிவித்ததைத் தொடர்ந்து சர்வதேச சமூகத்தின் திருப்தியும் வெளிப்படத் தவறவில்லை. புலிகள் பேச்சின் சமபங்காளிகள் என்ற நிலைப்பாட்டிற்கு ஆதரவு கிட்டியதேயன்றி கேள்வி எழுப்பப் படவில்லை. ஆயின், இவையெல்லாம் சர்வதேச அபிப்பிராயத்தை பிரதிபலிக்கவல்ல சில நாடுகளில் விதிக்கப்பட்ட புலிகள் தடையை அகற்ற ஏன் உதவவில்லை. பேச்சில் புலிகளின் ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளும் இந்நாடுகள் ஏன் புலிகள் தடையை அகற்றவில்லை. இதுதான் இன்றைய பேச்சின் முட்டுக்கட்டையை உருவாக்கிய மூலவேர் எனலாம்.

யுத்தத்தில் புலிகளை சர்வதேச நிலைமைகளில் பலவீனப்படுத்துவது அல்லது ஒடுக்குவது இவற்றின் நோக்கமாக இருக்கலாம். ஆனால், சமாதானத்தில் புலிகள் தமது விசுவாசமான ஈடுபாட்டை வெளிப்படுத்திவரும் வேளையில் புலிகள் மீதான தடை பிரயோகத்தில் இருப்பது சமாதானத்தில் புலிகளை சர்வதேச நிலைமைகளில் பலவீனப்படுத்துவதாகுமே. அமைதியை வரவேற்கும் அதேநேரம் பேச்சில் தமிழ்மக்கள் தரப்பை பலவீனப் படுத்துவது சர்வதேசத்தின் வெளிப்படை குறித்தும் நடுநிலைமை குறித்தும் தமிழ் மக்கள் அச்சமடையவே வழிவகுக்கும். சர்வதேசத்தின் சாட்சிமீது தமிழ்மக்கள் கொண்ட நம்பிக்கை தளர்ந்து போகும்போது சமாதானத்திற்கிருக்கும் இறுதித் தெரிவும் அடைபட்டுப்போகும் ஆபத்து உண்டு.

அமெரிக்காவில் நடந்த முன்னோடி நிதி மாநாட்டில் புலிகள் புறந்தள்ளப்பட்டனர். இது ஒஸ்லோ தீர்மானத்திற்கு முரணானது. அமெரிக்காவில் புலிகள்தடை புலிகளின் பங்கேற்பைச் சாத்தியப்படுத்தவில்லை என்றால் அதைச் சாத்தியப்படுத்தக்கூடிய இடத்தை தெரிவுசெய்திருக்கவேண்டும். அவ்வாறு நிகழாத பட்சத்தில் தடையைப் பிரயோகிப்பதற்கான தருணத்திற்காக தடையுள்ள ஒருநாடு தெரிவு செய்யப்பட்டது என்றே அர்த்தம்.

**- பிரபுத்திரன் -**

புலிகளின் சரக்குக்கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்டது. பின் நடந்த பேச்சுக்களில் இனி இலங்கைக் கடற்பரப்பிலேனும் இவ்வாறான சம்பவங்கள் நிகழும்போது கண்காணிப்புக் குழுவை அழைத்து பரிசோதிப்பதென்று முடிவாகியது. ஆனால், கடந்தவாரம் மீண்டும் புலிகளின் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் புலிகள் கப்பலை பரிசோதிக்க அனுமதித்த நிலையில். இவ்விரு சம்பவத்தின்போதும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கிறது. சர்வதேச ஒழுங்கு விதிகளும் மீறப்பட்டிருக்கின்றன. ஆனால், அதற்குரிய கண்டனத்தை, அழுத்தத்தை சர்வதேசம் அரசுமீது பிரயோகிக்கவில்லை. இது அரசியல், இராணுவம் தவிர்ந்த விடயத்திலும் புலிகள் ஒடுக்கப்படுவதற்கு சர்வதேச சமூகம் அரசுக்கு ஒத்துழைக்கின்றதா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

மேலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழ்மக்களின் மீள்குடியேற்றம் நிறைவேற்றப்படவில்லை. அம்மக்களின் வாழ்விடங்கள் உயர்பாதுகாப்பு வலயங்கள் எனப்படுகின்றன. மக்கள் தம் வீடுகளில் குடியேறுவதைத் தடுக்கும் ஜனநாயக மீறல் அரசியலமைப்பில் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நியாயப்படுத்தப்படுகின்றது.

இறுதித்தீர்வு குறித்து ஆராய புலிகள் தயாராகிவிட்டபோது அதனைக் கொண்டுவருவதற்கு அரசியல் யாப்பு மாற்றத்திற்கு உகந்த சூழல் இல்லையெனவும் அதுவரை பொறுத்திருக்கவேண்டுமெனவும் புலிகளிடம் பேச்சில் அரசதரப்பு பிரதிநிதிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதற்கு மாற்றீடாக அவசரப் புனர்வாழ்வுப் பணிக்கான அதிகாரம்மிக்க நிதியலகொன்றைப் புலிகள் கோரியபோது அதற்குச் சட்டத்தில் இடமில்லை எனப்படுகிறது.

அரசின் இந்த நிலைப்பாட்டிற்கு அழுத்தத்தைப் பிரயோகிக்கவேண்டிய சர்வதேச சமூகம் டோக்கியோவில் ஒதுக்கிய நிதிமூலம் அதற்கொரு அங்கீகாரத்தையே அளித்திருக்கிறதெனலாம்.

மொத்தத்தில் உள்நாட்டளவில் தமிழ் மக்கள் பேச்சில் சமபங்காளிகளுக்கான அங்கீகாரத்தைப் பெறமுடியாமல் தடுக்கப்படுகிறது. அதற்காகச் சட்டம் பிரயோகிக்கப்படுகிறது. அதேபோல சர்வதேச அளவில் தமிழர் தரப்பிற்குரிய அங்கீகாரம் புலிகள் மீதான தடையினால் தடுக்கப்படுகிறது. விட்டுக்கொடுப்பற்ற இனவாதத்திற்கு ஒரு ஊக்க மாத்திரையாக அமையும் ஆபத்துண்டு. சர்வதேச நிலைமைகளில் புலிகளைப் பலவீனப்படுத்துவது உள்நாட்டளவில் புலிகளின் கோரிக்கைகளைப் புறந்தள்ளவும் சமபங்காளித்துவ அந்தஸ்தைக் குறைக்கவும் விரும்பும் அரசின் நிலைப்பாட்டை வலுப்படுத்தும். இதில் பலவீனப்படுவதும் வலுப்படுவதும் முறையே புலிகளும் அரசும் அல்ல. மாறாக முறையே சமாதானமும் சமாதானத்திற்கு எதிரான சக்தியுமே.

தமிழ்மக்கள் இதுவரை நடந்த பேச்சுக்களில் விரக்தியடைந்து இம்முறை சர்வதேச அனுசரணையுடன் புதிய களத்தில், புதிய விதத்தில், புதிய சூழலில் நடக்கும் பேச்சுக்களில் நம்பிக்கை கொண்டிருக்கும்போது மேற்கண்ட விளைவுகளால் இறுதியான பாதைமீதும் அவர்களை நம்பிக்கை இழக்கவைப்பதுடன் தமிழ்மக்களை சமாதானம் எச்சரிக்கவும் செய்கிறது.

இதிலிருந்து தமிழ்மக்களை விடுவிக்காது தமிழ்மக்களிடமிருந்து யுத்தத்தையும் விடுவிக்க இயலாது. யுத்தத்திற்குத் திரும்பவியலாத கட்டத்தை சமாதானம் எட்டவேண்டுமென்ற சர்வதேச விருப்பார்வம் யுத்தம்மீது நம்பிக்கை கொள்ளத்தேவையில்லாத சர்வதேசத்தின் அங்கீகாரத்தை தமிழ்மக்களுக்கு வழங்குவதிலிருந்துதான் அடையப்பட இயலும்.

இதில் அனுசரணையாளர் பாத்திரம் பேசுவதற்கான அனுசரணையை வழங்குவதிலிருந்து மாத்திரம் அர்த்தம் பெற்றுவிடாது. பேச்சு வெற்றிபெறுவதற்கான சூழலைப் பிறப்பிப்பதிலிருந்துதான் அது பிறந்திட இயலும். அவ்வாறாயின் தமிழ்மக்கள்கொண்டுள்ள அச்சத்தைக் களையும் பொருட்டு அது சர்வதேச அளவில் பணியாற்றவேண்டி இருக்கிறது. ●



www.eelamview.com

# இராசதந்திரமும் கற்கவேண்டிய பாடங்களும்

**கலாநிதி க.சோமாஸ்கந்தன**

## 'உலகெங்கும் தமிழீழப்பேச்சு இது உருவாகப் போகட்டும் எங்களின் மூச்சு'

- எழுச்சிப்பாடல் வரிகள் -

போராடிப் பெறாத சுதந்திரத்தை போராடிப் போட்டுடைக்கும் சிறப்பு சிறிலங்காவுக்கு உண்டு. உலகின் மிகப் பழமைவாய்ந்த உள்நாட்டுப் போர் சிறிலங்காவில் நடப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் இல்லாத அளவுக்கு உள்நாட்டுப் போர்கள் உலகில் மலிந்துள்ளன. 'பிணக்குத் தீர்வு' (Conflict Resolution) என்ற கற்கை உருவாவதற்கு இது காரணமாகியுள்ளது. இராசதந்திரிகளும் கல்விமான்களும் இவ்விடயத்தில் தீவிர கவனம் செலுத்துகின்றனர். தடுப்பு இராசதந்திரம், பிணக்கு முகாமைத்துவம், அமைதி முன்னெடுப்பு என்று மூவகை விடயங்களை உலக சமுதாயம் தனித்தும் ஒருமித்தும் நடைமுறைப்படுத்துகின்றது.

சிறிலங்காவில் அமைதியை நிலைநாட்டுவது மூலம் தமக்கு அமைதி முன்னெடுப்பு பற்றிய செய்முறை விளக்கம் கிடைக்குமென உலக சமுதாயம் நம்புகின்றது. இத்தீவின் பிணக்கை இராணுவ பலத்தின்மூலம் தீர்க்கமுடியாது என்ற முடிவுக்கு உலக சமுதாயம் வந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளைச் சமபங்காளியாக இணைக்க வேண்டிய அவசியத்தை அவர்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். சமபங்காளி என்ற பதத்தின் அர்த்த பரிமாணங்கள் காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன. இதனால் அமைதி முன்னெடுப்பில் பின்னடைவு ஏற்படுகின்றது.

காலஞ்சென்ற பாரதப் பிரதமர் நேரு ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்திற்கு வருகைதந்து உரையாற்றும் போது, ''எதிரி நேசக்கரம் நீட்டினால் அதை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்'' என்றார். பற்றுவதுமூலம் கிடைக்கும் அனுகூலங்களை அவர் இவ்வாறு விளக்கினார். ''எதிரியின் நேசக்கரம் உண்மையானதாக இருந்தால் நாம் ஒரு ஆப்த நண்பனைப் பெற்ற திருப்தி அடைவோம். போலியாக இருந்தால் இறுகப் பற்றுவது மூலம் எதிரியின் கையைச் செயலிழக்கச் செய்து விடுவோம்.'' அமைதி முன்னெடுப்பின் இரட்டை நோக்கை இதைவிடத் திறமையாகச் சொல்ல இயலாது.

மூன்று மாதங்களுக்கு முன் மேற்கு ஜப்பான் தலைநகர் கியோட்டோவின் றிற்சுமிக்கன் பல்கலைக்கழகத்தில் சிறிலங்கா அமைதி முன்னெடுப்பு பற்றிய ஆய்வுப் பட்டறை இடம்பெற்றது. இதில் ஜப்பான் அரசின் மூத்த இராசதந்திரிகளில் ஒருவரான யசுசி அகாசி முக்கிய பேச்சாளராகக் கலந்து கொண்டார். 72 வயதினரான இவர் ஐ.நாவின் அனைத்துலக மட்டச் செயற்பாடுகளில் முக்கிய பங்களிப்புச் செய்பவர். ஐ.நாவின் பிரதிநிதியாக கம்போடியா மற்றும் முன்னாள் யூகோசுலோவியா ஆகியவற்றின் பிணக்குகளில் தலையிட்டவர். ஆயுதக் களைவுக்கும் மனிதநேய உதவிகளுக்குமான ஐ.நா உதவிச் செயலாளராக இவர் இளைப்பாறும் காலத்தில் பணியாற்றினார். ஜப்பான் நாட்டின் பிணக்குத் தடுப்பு மையத்தின தலைவராக (Chairman, Japan centre for Conflict Prevention) இதன்பின் நியமிக்கப் பட்டுள்ளார்.

சிறிலங்கா விவகாரத்துக்குப் பொறுப்பாக ஜப்பானியப் பிரதமரின் இலங்கைக்கான விசேட தூதுவராகவும் அகாசி செயற்படுகிறார். ஐ.நா மட்டத்தில் மிக முக்கிய பதவி வகிக்கும் பேராசிரியர் யோசோ யொகோடா (PROF.YOZO YOKOTA) பற்றியும் சில சொற்கள் தரவேண்டும். இவர் ஐ.நா மனித உரிமைகள் பற்றிய ஆணையத்தின் உறுப்பினராகப் பணியாற்றுகிறார். அகாசி அளவுக்கு வளர்ச்சி காணாவிட்டாலும் வல்லமைமிக்க ஜப்பானிய இராசதந்திரிகளில் ஒருவராக யொகோடா கருதப் படுகிறார். றிற்சுமிக்கன் மாநாட்டில் நடுநாயகமாக வீற்றிருந்தவர் அகாசி என்பதில் சந்தேகமில்லை.

தனது பேருரையில் ஜப்பான் புதிய இராசதந்திரப் பாதையில் செல்கின்றது என்று அகாசி கூறினார். ''தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவி வழங்குவதில்லை என்ற நிலைப் பாட்டிலிருந்து, அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்த அமைப்பிற்கு உதவி வழங்கும் நிலைக்கு வந்துள்ளோம். இதில் சில ஆபத்துக்கள் உள்ளன. இருப்பினும் நாம் இதைத் தொடருவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.'' என்றும் அவர் பேசினார். தலைமை தாங்கிய பல்கலைக் கழகத்தின் தலைவர் நகத்தா தோயோ ஓமி (NAGATA TOYO OMI) தனது தலைமை உரையில், ''வெளிவிவகார இராசதந்திரத்தில் ஜப்பான் ஒரு முக்கிய கட்டத்தில் நிற்கின்றது'' என்றார்.

றிற்சுமிக்கன் பல்கலைக் கழகத்தின் அனைத்துலகக் கற்கை மற்றும் ஆராய்ச்சிக்கான மையத்தின் நிறைவேற்று இயக்குனர் பேராசிரியர் மொன்தே காசிம் ஒரு வித்தியாசமான கருத்தை முன்வைத்தார். ''ஜப்பான் நாட்டின் உறவுகள் சிறிலங்காவுடன் மாத்திரமே. சிறிலங்கா ஒரு பரிசோதனைக் களம். ஜப்பானுடைய இறுதிக் குறிக்கோளின் பரப்பு மிகப் பெரியது, விரிவானது''

இதையொட்டிப் பேசிய ஜப்பான் வெளிவிவகார அமைச்சகப் பேச்சாளர் ஹத்துகிசா தகீமா, ''புதிய விதிமுறைகளும் புதிய நிகழ்ச்சி நிரல்களும் எம்மால் நடைமுறைப்படுத்தப்படும்'' என்றார்.

ஜனநாயகமும் ஆழ வேரோடிய உள்நாட்டுப் பிணக்கும் என்ற சுவீடன் நாட்டுப் பிரசுரத்தில் (DEMOCRACY AND DEEP - CONFLICT. INTERNATIONAL IDEA INSTITUTE, STOCK HOLM, SWEDEN. 1998) பின்வரும் கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது. பிணக்குகளில் தொடர்புடைய பகுதிகள் அதிகாரப் பங்கீட்டிற்குச் சம்மதித்தால் சர்வதேச சமூகம் அதற்கு வேண்டிய இராசதந்திர உதவிகள் அனைத்தையும் வழங்கும். இவ்வாறான உதவிகள் பாதுகாப்புக் கூட்டமைப்பில் அங்கத்துவம், வர்த்தகச் சலுகை, என்பவற்றுடன் அதிகாரப் பகிர்விற்கு உதவும் ஊக்குவிப்புக்களும் அடங்கும் (பக்கம் - 142)

நன்கொடைகள், கடனுதவிகள், மீள்கட்டமைப்பு வசதிகள், நிவாரணம் என்பன 'ஊக்குவிப்புக்கள்' என்ற ஒற்றைச் சொல்லில் அடங்கும். சிறிலங்கா பெறும் உதவிகள் தமிழர்களுக்கெதிரான போர் தீவிரமடைந்த காலத்திலும் மிகக் கூடுதலாக வழங்கப் பட்டன. அவை போரை ஊக்குவிப்பதற்காக வழங்கப் பட்டவை என்று கருதுவதில் தவறில்லை. அண்மையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி ஒன்றின்படி மிகக் கூடுதலான வெளிநாட்டு உதவிகளைப பெறும் நாடுகளில் ஒன்றாக சிறிலங்கா இடம்பெறுகின்றது. வெளிநாட்டு உதவிகளில் முற்றுமுழுதாக இயங்கும் நாடாக அது கணிக்கப்படுகின்றது.

சிறிலங்காவுக்கு மிகப் பெருந்தொகை நிதியை கொடுக்கும் நாடு ஜப்பான் என்பதில் ஐயமில்லை. உலகநாடுகள் வழங்கும் நிதியுதவிகளின் கூட்டுத்தொகையிலும் பார்க்க ஜப்பான் வழங்கும் உதவி கூடுதலானது. உலக வங்கி, நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன வழங்கும் நிதிக் கடனின் கூட்டுத்தொகையில் 45 வீதத்தை ஜப்பான் சிறிலங்காவுக்கு வழங்குகின்றது. தமிழர்களுக்கு எதிரான போர்க் காலத்தில் நிபந்தனை யாதொன்றும் இன்றி ஜப்பான் வழங்கிய உதவிகள் போரை ஊக்குவிப்பதற்கே பயன்பட்டன. இதே குற்றச்சாட்டை ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, இந்தியா உட்பட அக்காலப் பகுதியில் சிறிலங்காவுக்கு உதவி வழங்கிய ஒவ்வொரு நாட்டின்மீதும் சுமத்த முடியும்.

ஜப்பான் உட்பட உலக சமுதாயத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் யாவும் தமிழர் தாயகத்தின் வளர்ச்சிபற்றி அக்கறை கொண்டது கிடையாது. அதே சமயத்தில் தாம் வழங்கும் நிதி உதவிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது பற்றியும் அவை கவனம் செலுத்தியது கிடையாது. செல்வந்த நாடுகளின் வறிய மக்கள் வழங்கிய வரிப் பணத்தை வறிய நாடுகளின் செல்வந்தர்களுக்கு வழங்குவதையே வெளிநாட்டு உதவிகள் என்பார்கள். இப்போது சிறிலங்காவின் அமைதி முன்னெடுப்பிற்கு வாரி வழங்குவதற்கு உலக நாடுகள் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றன.

யூகோசுலாவியா உடைவிற்குப்பின் தோன்றிய பொஸ்னியா - ஹேட்சேகோவினா உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தபின் மேற்கு நாடுகள் வழங்கிய மீள் கட்டமைப்பு உதவிகள் உரிய விதத்தில் பயன்படுத்தப்படவில்லை. வழங்கப்பட்ட நன்கொடைகள் அரசியல் தலைவர்களாலும் இராணுவ அதிகாரிகளாலும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்துலக மட்டத்தில் வெளிப்படையான அரச நிர்வாகத்திற்காக குரல் கொடுக்கும் அமைப்பான டிரான்ஸ்பேரன்சி இன்ரர்நாசனல் (TRANSPARENCY INTERNATIONAL) தனது ஏப்பிரல் 09.2003 கடிதத்தின் மூலம் சிறிலங்காவை பின்வரும் விதிமுறைகளை நடைமுறைப் படுத்துமாறு கோரியுள்ளது.

நீங்கள் பெறும் நிதி உதவிகளை, அவை எத் தேவைக்காகத் தரப்பட்டனவோ அத்தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தவேண்டும். அரசியல் வாதிகள் தமது சொந்தத் தேவைகளுக்கு உலக நாடுகள் வழங்கும் நிதியைக் கையாள்வதற்கு அனுமதிக்கக் கூடாது. இராணுவ உபகரணங்கள், ஆயுதங்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கும், இராணுவத்தினரின் பலத்தையும் எண்ணிக்கையையும் பெருக்குவதற்கும் மீள்கட்டமைப்பு நிதியுதவிகள் கட்டாயமாகப் பயன்படுத்தக் கூடாது. உள்வரும் நிதி, அவற்றின் பங்கீடு, செலவீனங்கள் என்பவற்றின் நடைமுறைக் கணக்குகள் சரிவர பேணப் படவேண்டும். ஒரு குற்றப் பத்திரிகை போன்ற இக் கடிதத்தில் அதை அனுப்பிய அமைப்பின் தலைவர் பீற்றர் எல்ஜென் (PETER ELGEN) ஒப்பமிட்டுள்ளார்.

கொழும்பில் நிலை கொண்டுள்ள இராசதந்திரிகள் வெளிநாட்டு நிதி உதவிகளை சிறிலங்கா பயன்படுத்தும்போது தென்படும் குறைபாடுகளை பின்வருமாறு வரிசைப் படுத்தியுள்ளனர்:

01.நன்கு வடிவமைக்கப்பட்ட மேம்பாட்டுத் திட்டமும், அதை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான ஆளணியும், கால அட்டவணையும் இல்லாமை.

02.நிறைவேற்று அதிகாரிகள் அரசியல் காரணங்களுக்காக நியமிக்கப்பட்டவர்கள். அரச நிர்வாகம் திறமையற்றது, சுய லாபம் தேடுவதில் முனைப்பாக ஈடுபடுகின்றது.

03.சொகுசான வாகனங்கள், மிதமிஞ்சிய வசதிகளுடன்கூடிய அலுவலகங்கள், உயர் நிர்வாகச் செலவு என்பவற்றில் வீண்விரயம் செய்யப்படுகின்றது.

04.கணக்கு வழக்குகளைப் பேணுவதிலும், செலவீனங்களை மட்டுப்படுத்துவதிலும் அசிரத்தை காட்டப்படுகின்றது.

05.நிர்வாகத்தின் எல்லா மட்டத்திலும் நிதி மோசடிகளும் ஊழலும் நிறைந்துள்ளன.

இக்குறைபாடுகளை அறவே நீக்க இயலாவிட்டாலும் ஓரளவு கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு உகந்த யோசனைகளைப் பின்வரும் நாடுகள் வழங்கியுள்ளன. யோசனைகளும் அவற்றை வழங்கிய நாடுகளும் இங்கு பட்டியலிடப்படுகின்றன:

01)தெரிவுசெய்யப்பட்ட அரச நிர்வாக அலகுகளைப் பலப் படுத்தி அவற்றின் செயற் றிறனை உயர்த்துங்கள் - கனடா.

02)அரச நிர்வாகச் சீர்திருத் தத்தை நடைமுறைப்படுத்துங் கள், பொது அமைப்புக்களைப்

(மறு பக்கம் தொடர்ச்சி)



> செல்வந்த நாடுகளின் வறிய மக்கள் வழங்கிய வரிப்பணத்தை வறிய நாடுகளின் செல்வந்தர்களுக்கு வழங்குவதையே வெளிநாட்டு உதவிகள் என்பார்கள்.



www.eelamview.com

பலப்படுத்துங்கள்.
-அவுஸ்திரேலியா.

03)பொதுமக்கள் மத்தியிலுள்ள எல்லாப் பிரிவினர்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துங்கள், இதனால் முழுச் சமுதாயத்தையும் ஒன்றிணையுங்கள் - ஜேர்மனி.



04)கொடையாளிகள், மனித உரிமைக் குழுக்கள், அழுத்தம் பிரயோகிக்கும் அமைப்புக்கள், பொதுமக்கள், அரச நிர்வாகம் ஆகியவற்றுக்கிடையில் இறுக்கமான பிணைப்பையும், தகவல் பரிமாற்றத்தையும் ஏற்படுத்துங்கள்.
- ஐக்கிய இராச்சியம்.

நிதிப்பயன்பாடு சம்பந்தமான சிறிலங்காவின் நிர்வாகக் கட்டமைப்பில் பணச் செலவுக் கணக்கைப்பேணும் வசதி மாத்திரம் உண்டு. நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது, (UTILISATION) அதன் பெறுபேறுகள் என்ன (RESULTS AND ACHIEVEMENTS) போன்ற விபரத் திரட்டு பேணப்படுவதில்லை. செலவு (EXPENDITURE) மாத்திரம் போதாது, எப்படிச் செலவு செய்யப்பட்டது, கிடைத்த பயன் என்ன என்ற விபரம் கட்டாயம் தரப்படவேண்டும். உலகின் தரம்வாய்ந்த கணக்கியல் நிபுணர்கள் இதை இடைவிடாது வலியுறுத்துகின்றனர்.

திறைசேரியின் பாலேந்திரா குழுவும், வெளிவளத் திணைக்களம் (EXTERNAL RESOURCS DEPT) கொள்கை மேம்பாட்டு அமைச்சகம் (POLICY DEVELOPMENT MINISTRY) என்பன திட்டக் கண்காணிப்பு அமைப்புக்களைக் கொண்டுள்ளன. இவை செலவை மாத்திரம் கண்காணிக்கின்றன. செலவின் தன்மை, கிடைத்த பயன் என்பவற்றைக் கண்காணிப்பதில்லை. இது மோசடிகளுக்கும், ஊழலுக்கும், நிதித் திசை திருப்பலுக்கும் வழிவகுக்கின்றது. அரச வரவுசெலவுக் கணக்கை பரிசோதிக்கும் பொறுப்பை கணக்குப் பரிசோதகர் நாயகத்தின் திணைக்களம் (AUDITOR - GENERAL'S DEPT) பரிபாலிக்கின்றது. அரச நிதி விதிமுறைகள் (FINANCIAL REGULATIONS) சரிவர அமுலாக்கப்படுகின்றனவா? என்பதை மாத்திரம் இத்திணைக்களம் கவனிக்கின்றது.

ஒரு திருப்திகரமான கணக்குப் பரிசோதகர் நாயகத்தின் திணைக்களம் ஒதுக்கப்பட்ட நிதி தனது இலக்கை அடைந்துவிட்டதா என்பதை முதற்கண் பார்க்க வேண்டும். அடுத்ததாக செலவிடப்பட்ட நிதிமூலம் எதிர்பார்த்த பலன் அடையப்பட்டு விட்டதா என்பதை அறிய வேண்டும். இந்தவகைப் பரிசோதனை இல்லாத காரணத்தால் சிறிலங்காவின் நிதிச் சீர்கேடுகள் பல்கிப் பெருகியுள்ளன என்று துணிந்து கூறலாம். சிங்கப்பூரின் கணக்குப் பரிசோதகர் நாயகத்திற்கு வழங்கப்படும் மாதாந்த ஊதியம் அந்த நாட்டுப் பிரதமரின் மாதாந்த ஊதியத்திலும் பார்க்கக் கூடுதலானது. கணக்குப் பரிசோதகர் நாயகத்தின் திணைக்களச் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை உணர்த்த இது போதுமானது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சாசனவியல் நிபுணர்களும் பொருண்மிய அதிகாரிகளும் சிறிலங்கா அரசின் அரசியல் மற்றும் நிதி நிர்வாகக் கட்டமைப்பின்மீது கடும் அதிருப்தி கொண்டுள்ளனர். சிங்களவர்களால் சிங்களவர்களுக்கென்றே செய்யப்பட்ட அரசியல் சாசனம் தமிழர்களை எப்படிக் கட்டுப்படுத்தும் என்ற கேள்வி எழுகின்றது. பிற நாடுகளில் சாசனம் ஒரு கூட்டு முயற்சி, இங்கோ தமிழர்களுக்காகச் சிங்களவர்கள் சட்டமியற்றுகின்றனர். இப்போதிருக்கும் அரசியல் சாசனத்தின் கீழ் வெளிவளங்களை நீதியாகப் பங்கீடு செய்வது இயலாத காரியம். நிதியை எப்படிச் செலவிடுவது என்பது பற்றிய இறுதித் தீர்மானம் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றம் மாத்திரம் தீர்மானிக்கும். நியாயமான பங்கீடை எதிர்பார்ப்பது பேதமை.

இப்போதிருக்கும் முரண்பாடு மிகவும் ஆழமானது, அடிப்படையானது. நூறு வீதம் சாதகமான வாக்களிப்பு மூலம் சிறிலங்காவின் அரசியல் சாசனத்தை மாற்றமுடியுமா என்பது இன்னுமோர் கேள்வி. பாராளுமன்றம் தனது அதிகாரங்களைப் பங்கீடு செய்ய முடியாது. இது சாசனத்தின் அடிச்சட்டம். அடிப்படைகளை மாற்ற முடியாது என்ற நீதிமன்றத் தீர்ப்புக்கள் 1973ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியாவில் வழங்கப்படுகின்றன. மாற்றங்களை அனுமதிக்கும் சரத்துக்கள்மூலம் சாசனத்தின் அடிப்படைச் சரத்துக்களை மாற்ற இயலாது என்ற தீர்ப்பு கேசவானந்த பாரதி எதிராக கேரள மாநில அரசு (KESAVANANDA BHARATI Vs GOVT OF KERALA (1973) 60 AIR 1461 SC) என்ற இந்திய அதியுயர் நீதிமன்றத் தீர்ப்பில் வழங்கப்பட்டுள்ளது. சிறிலங்கா நீதிமன்றங்களும் இதை அனுசரித்து நடக்கின்றன.

நிலைமை இவ்வாறிருக்க வேதாளம் சுமந்த விக்கிரமாதித்தன்போல் அனைத்துலக இராசதந்திரிகள் எமது சமாதானச் செயலகம் நோக்கிப் படையெடுக்கின்றனர். இராசதந்திர அழுத்தம் (DIPLOMATIC PRESSURE) என்ற முக்கிய பாடத்தை எமக்குப் புகட்டுவது அவர்களுடைய நோக்கமாக இருக்கின்றது. ''இதுவொரு பொன்னான சந்தர்ப்பம் நழுவவிடாதீர்கள். ஜப்பானில் நடக்கும் கொடையாளிகள் மாநாட்டிற்குத் தவறாது வாருங்கள்" என்கிறார் கிளிநொச்சி வந்த அகாசி. யாருக்குப் பொன்னான சந்தர்ப்பம் என்பதுதான் கேள்வி. ஆசை காட்டுதல், மிரட்டிப் பயமுறுத்துதல், புத்தியீனமாக நடவாதீர்கள் என்று அறிவுரை



கூறுதல், உங்கள் எதிர்காலம் இருள்மயம்தான் என்று இரக்கப்படுதல் இவையாவும் இராசதந்திர அழுத்தங்களின் சில கூறுகளாகும். ஜப்பானில் நடைபெறும் கொடையாளிகள் மாநாட்டிற்கு நீங்கள் வராவிட்டால் அது வெளி உலகிற்கு ஒரு தவறான சமிக்ஞையைத் தரும் என்ற கூற்றும் இந்த ரகத்தைச் சேர்ந்ததே.

தமிழீழம் உட்பட உலகநாடுகள் யாவும் தேசிய நலனைத் தமது இராசதந்திரக் குறிக் கோளாகக் கொண்டுள்ளன. ஜப்பான் இதற்கு விதிவிலக்கல்ல. முதலாம் உலகைச் சேர்ந்த இந்த நாட்டில் தொழிற்திறன் மிக்க மனிதவளம் தவிரப் பிற இயற்கை வளங்கள் யாதொன்றும் கிடையாது. எண்ணெய், எரிவாயு, நிலக்கரி, யுரேனியம், தைத்தேனியம், சிலிக்கன், இலிமினைற், அலுமீனியம், வெள்ளி, தங்கம், நிக்கல், இரும்பு, செம்பு போன்றவற்றில் ஒன்றுகூட அதனிடம் இல்லை. ஈயம், துத்தநாகம் என்பன மாத்திரம் சிறிதளவில் ஜப்பான் மண்ணில் கிடைக்கின்றது.

மூலப்பொருட்களை அவை கிடைக்கும் நாடுகளில் மலிவாகக் கொள்வனவு செய்வதற்கும், கொள்வனவு செய்யப்பட்டவற்றை பாதுகாப்பான கடற்பாதை மூலம் கொண்டு சேர்ப்பதற்கும் பொருத்தமான வெளியுறவுக் கொள்கையை ஜப்பான் நடைமுறைப்படுத்துகின்றது. சுருங்கச் சொன்னால் அதனுடைய தொழிற்சாலைத் தேவைகள் அதன் இராசதந்திரத்தை இயக்குகின்றன. தயாரிப்புக்களை சந்தைப்படுத்தவேண்டிய தேவையும் அதற்கு இருக்கிறது. இதுவும் ''மேடின் ஜப்பான்'' இராசதந்திரத்தில் அடங்கும்.

கடந்த பத்து வருடங்களாக ஜப்பான் கடும் பொருளாதாரப் பின்னடைவுகளைச் சந்திக்கின்றது. ஜப்பான் நாட்டின் வங்கி நிறுவனங்கள் கடன் பெற்றோர் திருப்பிச் செலுத்தாத காரணத்தால் நட்டத்தில் இயங்குகின்றன. உலகின் மிகப்பெரிய வர்த்தக வங்கி என்று வர்ணிக்கப்படும் ஜப்பானின் மிசுகோ வங்கி (MIZUHO HOLDINGS) படுதோல்வி கண்டுள்ளது. ஜனவரி 2003இல் மிசுகோ 16.53 மில்லியன் டாலர்களை இழந்துள்ளது. ஜப்பானின் பொருளாதாரம் இக்கட்டான நிலையில் இருந்தாலும் சேமிப்புக்களும், முதலீடுகளும் அதற்கு கைகொடுக்கின்றன என்பது வெளிப்படை.

அனைத்துலக நாணய நிதியத்தின் நான்காம் விதியை மீறுமளவுக்கு ஜப்பான் இறங்கியுள்ளது. உலகின் பிற நாணயங்கள் பின்னடைவு காணும் விதத்தில் நாடுகள் தமது நாணயத்தின் பெறுமதியை இஸ்டம்போல் கூட்டிக் குறைப்பதை நான்காம் விதி தடை செய்கின்றது.

புதிய உத்திகள் மூலம் தனது அந்தஸ்த்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஜப்பானுக்கு இருக்கின்றது. முன்பு அது உள்நாட்டுப்போர் போன்ற நெருக்கடி நிலை தோன்றும் பகுதிகளில் தலையிடுவதைத் தவிர்த்து வந்தது. இப்போது அமைதி முன்னெடுப்பு என்ற திட்டத்துடன் ஆப்கானிஸ்தான், சிறிலங்கா, ஆச்சே, மின்டானோ போன்ற நெருக்கடி மையங்களில் ஜப்பான் கால்பதிக்கிறது. ஜப்பான் எடுக்கும் இவ்வகை முயற்சிகள் பலனளிக்கவில்லை. தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிடும்படி தனது நாட்டில் ஜப்பான் நடத்திய ஆச்சே சம்பந்தமான அமைதி மாநாட்டில் போராளிகளை அது நிர்ப்பந்தித்தது. அவர்கள் மறுத்தபோது இராணுவத் தாக்குதல் நடத்தும்படி இந்தோனேசிய அரசுக்கு ஜப்பான் பரிந்துரை செய்தது.

சிறிலங்காவுக்கான கொடையாளிகள் மாநாட்டை ஜப்பான் இரண்டாவது முறையாக இவ்வருடம் நடத்தியுள்ளது. 1980களின் முற்பகுதியில் முதலாவது மாநாடு சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சி முடிவுற்ற காலத்தில் நடத்தப்பட்டது. அப்போதும் சிறிலங்கா பாரதூரமான பொருளாதார வீழ்ச்சி கண்டிருந்தது. பிறேமதாசா ஆட்சிக் காலத்தில் பிரதமர் ரணில் கைத்தொழில் அமைச்சராகப் பதவி வகித்தார். இதே காலப்பகுதியில் ஜப்பானுக்கான சிறிலங்கா தூதுவராக சிதம்பரம் மகேந்திரன் பதவி வகித்தார். ரணிலும் மகேந்திரனும் கூட்டாக இணைந்து ஜப்பானிய உதவிகளையும் முதலீடுகளையும் சிறிலங்காவுக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

ஜப்பான் நாட்டின் பிரதான வர்த்தக சங்கம் கீடென்றுன் (KEIDENRUN) தலைநகர் டோக்கியோவில் இயங்குகின்றது. ஜப்பானிய விவகாரங்களில் மிகவும் சக்திவாய்ந்த பின்னணி அமைப்பான இதன் முன் தோன்றிய முதலாவது சிறிலங்கா அரசியல்வாதி டாக்டர் என்.எம்.பெரேரா ஆவார். 1970களில் இவர் நிதி அமைச்சராகப் பதவி வகித்தார். அப்போது அவர் ஜப்பானுக்கு யாத்திரை சென்று வர்த்தக சங்கத்தினரின் உதவியைக் கோரினார்.

ஜப்பான் - சிறிலங்கா இராசதந்திரப் பிணைப்பு மிகவும் வலுவானது. பௌத்த மதமும் இணைப்புக் கருவியாகப் பயன்படுகின்றது. ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகள் அமெரிக்காவின் தூண்டுதலுடன் சிறிலங்காவில் அமைதியை ஏற்படுத்த முனைகின்றன. இவர்களுக்கு ஈழத்தமிழர்களின் அபிலாசைகள், அச்சங்கள், தேவைகள் பற்றிய உண்மையான கரிசனை இருக்கின்றதுதானா என அஞ்ச வேண்டியுள்ளது. ●


www.eelamview.com

# வீரியமுள்ள விதைது

## ஒரு போராளியின் முடிச்சுவடுகள்...

— துளசிச்செல்வன் —

தாக்குதல்கள் செய்வதற்காக அவர்களைப் பாதுகாக்க வேண்டியதாகவும் அவர்கள் பாதுகாப்பாக இருப்பதற்கு தாக்குதல் செய்யவேண்டியதுமான களச்சூழலை அப்போது அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

ஒவ்வொரு கணத்திலும் அவர்கள் எதிர்கொள்ளவேண்டியிருந்த சிரமங்கள் ஏராளம். அவர்கள் சந்தித்துக்கொள்ளும் எந்தத் துயர்மலையாலும் துளிகூட அவர்களை நிலைகுலையச் செய்யமுடியவில்லை.

ஒவ்வொரு வீரனின் உள்ளமும் உறுதியால் செதுக்கப்பட்டு தேசப்பற்றினால் வைரம் பெற்றிருந்தது. எவ்வளவு கடினத்துக்குள்ளும் விடுதலைக்காய் உழைக்கும் அவர்களின் உழைப்பு வீச்சானதாய் இருந்தது. அத்தனை வீரத்திற்கும் விடுதலைப்பற்றிற்கும் உயர்வாய் அவர்களைத் தலைமைப் பற்றோடு உருவாக்கி வழிநடத்துபவன் யார்?



திருமலையின் அந்தக் காட்டு மரங்களும் மேட்டு நிலங்களும் ஆறுகளும் சதுப்பு வெளிகளும் முகம் மறக்காமல், குரல் மாறாமல் அறிந்து வைத்திருப்பது அவனைத்தானே. ஏன் எதிரிகூட அவன் பெயரை அறிந்து வைத்திருக்கலாம். ஏனென்றால் இவன்தான் அவர்களைப் பலதடவை தொல்லைப்படுத்தியும் இழப்புகளைக் கொடுத்தும் முகாமுக்குள் முடக்கியும் அவர்களின் எதிர்பார்ப்பு எதையும் நிறைவேற்ற முடியாமலும் அவலத்தையும் ஏமாற்றத்தையும் அவர்களிற்குப் பரிசாகக் கொடுத்திருந்தான். எப்படி அவர்கள் இவனை மறந்திருக்கமுடியும்?

ஒவ்வொரு உள்ளமும் உதடும் சேர்ந்து உச்சரிக்கும் பெயர்தான் கில்மன்... கில்மன்.

அங்கே அந்த உயர்ந்த காட்டிற்குள் ஒவ்வொரு போராளிக்கும் அருகிலிருந்தபடி அவர்களை வீரமாகவும் சகிப்புணர்வுள்ள விடுதலைப் போராளிகளாகவும் வளர்த்துக் கொண்டிருந்தான் கில்மன்.

ஒரு சாதாரண போராளியே ஓய்வுறக்கம் இல்லாது செயற்படவேண்டிய அந்த நாட்களில் அவர்களின் தளபதியாக அந்த அணியின் ஒட்டுமொத்த தேவைகளையும் அணி எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளையும் நிறைவேற்றவேண்டிய பணிகளையும் சிந்தித்துச் செயற்படவேண்டிய அவனது உழைப்பு எத்தனை கனதியானதாக இருக்கும்! கடினம் நிறைந்ததாக இருக்கும்!

கில்மன்... எப்படியிருப்பான்?!

கில்மன் என்ற பெயர்கொண்ட விடுதலை நெருப்பின் தோற்றம் இப்படித்தான் இருக்கும். சிரித்து வாரப்பட்ட தலைமுடி. செந்தளிப்போடு அனைவரையும் வசீகரிக்கும் பரந்த முகம். கருணையையும் கண்டிப்பையும் பிரதிபலிக்கும் பார்வை. சராசரியான உயரம். கம்பீரமோடு கூடிய நிமிர்வான தோற்றம். எப்போதும் அமைதியான சிந்தனை. வகுப்பட்டுக்கொண்டு பார்வையைத் தன்பாடே அலையவிடும் சுபாவம். இதுதான் அவனின் வெளித்தோற்றம். அவனுக்குள் கிளர்ந்தெழும் உணர்வுகளை வரையறைகளுக்குள் வடிவமைக்கிவிட முடியாது.

அது மூன்றாம் ஈழப்போரின் ஆரம்ப காலம். அவன்தான் திருமலைக் காட்டிற்குள் வரலாற்றைக் காப்பாற்ற வரலாறு படைத்துக்கொண்டிருக்கும் வீரர்களை வழிநடத்தும் தளபதியாக இருந்தான்.

அந்த அணி அங்கு நகர நினைத்ததே தன்மேலுள்ள பெரிய வரலாற்றுப் பணியொன்றின் தேவையை நிறைவேற்றத்தான். வன்னியின் காடுகளுக்குள்ளிருந்து உருவான சாள்ஸ் அன்ரனி எனும் சீலனின் பெயர்கொண்ட சிறப்புப் படையணியை தலைவர் அவசரமாகத் தலைநகர் அனுப்பியிருந்தார்.

எங்கள் வரலாற்றுப் புகழ்மிக்க தலைநகர்பூமி, சிங்களக் குடியேற்றங்கள் என்ற மறைப்பில் இனவாத கறையான்களால் அழிக்கப்பட்டு நகரங்களில் படிப்படியாக செல்லாக்குச் செலுத்திக்கொண்டிருக்கும் அரச படைகளிடம் திருமலைக்காட்டுப் பிரதேசமும் ஏறத்தாழ பறிபோன நிலையிலிருந்தது. மக்களின் குடியிருப்பு நிலங்கள் எமது கட்டுப்பாட்டிலிருந்து பறிபோனால் காடுகளுக்குள்ளிருந்துவிட்டு பாதுகாப்பாகப் பெரும் படையணியாக உருவாகி தாக்குதல்களைச் செய்து ஒரு காலத்தில் அவற்றைக் கைப்பற்றலாம். காடுகளையும் இழக்க நேர்ந்தால் அந்த மாவட்டத்தில் பின் சிறுதாக்குதல் செய்யவே சிரமமாய் இருக்கும். கால்வைக்கவே அதிகமான உயிர்விலை கொடுக்கவேண்டியிருக்கும். தலைநகருக்கான தாக்குதல் தளத்தை இழந்து போய்விடுவோம். தொடர்ச்சியான எமது பாரம்பரிய நிலம் துண்டாடப்பட்டு வந்தது. எனவே, காட்டையும் காட்டின் கரையோரங்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும் என்ற தேவை ஏற்பட்டது. அழிந்துபோய்க்கொண்டிருக்கும் வரலாற்றுச் சுவடுபொன்றைப் பாதுகாக்கும் பணியைப்போல முக்கியமானதாகவும் அவசர சிகிச்சை பெறும் நோயாளிக்குத் தேவைப்படும் இரத்ததானம்போல விரைவுபடுத்த வேண்டியதாகவும் இருந்தது அந்தப்பணி.


நிலையான பாதுகாப்புள்ள முகாமோ நிலமோ கட்டுப்பாட்டில் இல்லை. உணவு முதற்கொண்டு மருத்துவம் ஈறாக எந்த விநியோகங்களிலும் நம்பிக்கையில்லை. தங்கிடங்கள் இல்லாமையினால் மழை, வெயில் அச்சுறுத்தல்கள். அதிகமானவர்களுக்குப் பழக்கப்படாத புதிய சூழல். இப்படி, தொடராக இருக்கும் கேள்விகளுக்கெல்லாம் விடை தேடினால் அது கில்மனிடம்தான் கிடைக்கும் என்றே தலைவர் உணர்ந்திருக்கவேண்டும்.

ஏனெனில் சாள்ஸ் அன்ரனி படையணி தோற்றம்பெற்றபோது இவன் பயிற்சி ஆசிரியனாகவே கடமையாற்றியிருந்தான். சகல ஆயுதங்களின் தன்மைகளையும் பயிற்சி கொடுக்கவேண்டிய நுட்பங்களையும் நேரடியான அனுபவத்தில் நன்கு அறிந்திருந்தான். வேவு அணிக்குப் பொறுப்பாக இருந்து பல இடங்களிலும் வேவுத் தகவல்கள் திரட்டியிருப்பதோடு, அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் அவன் படித்த நாட்களில் கற்றுக்கொண்ட நிர்வாகம் தொடர்பான அறிவும் தந்திரம் தொடர்பான அறிவும், பல தாக்குதல்களுக்குத் தலைமையேற்றிருந்த அனுபவமும் சமர்களில் விநியோகத்தை வழிநடத்திய பரிச்சயமும் அவற்றிற்கு மேலாக

**சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி**
**சிறப்புத் தளபதி**
**லெப் கேணல் காந்தன் /கில்மன்**
(வேலாயுதபிள்ளை சிவகுமார்)
கண்டாவளை, கிளிநொச்சி.
வீரப்பிறப்பு 22.06.1970
வீரமரணம் 28.06.1995

அவனிடமே கூடவிருக்கும் கனிவாக ஒவ்வொரு போராளியின் மனதையும் அரவணைக்கும் தன்மையும் இவன்தான் அந்தப் பணிக்கு ஏற்றவன் என்ற உண்மையை உணர்த்தியது.

கில்மன் சகல துறைகளிலும் வல்லமையும் அனைவரையும் வழிநடத்தும் ஆளுமையும் கொண்டவனாக இருந்தான். நெருக்கடி நிறைந்த களச்சூழலுக்குள் தாக்குதல் இலக்கு ஒன்றைத் தெரிவுசெய்து, வேவு பார்த்து திட்டம் தீட்டுவது, அணிகளை ஒன்றாக்கி பயிற்சி கொடுப்பது, தாக்குதலுக்கு அணிகளை நகர்த்துவது, கைப்பற்றிய ஆயுதங்களையும் காயக்காரர்களையும் பாதுகாப்பாகக் கொண்டுவந்து சேர்ப்பது, பின்னணி மருத்துவ ஏற்பாடு செய்வது, களஞ்சியப்படுத்துவது இப்படி ஒவ்வொரு தாக்குதலுக்கு முன்னும் பின்னும் ஏராளமான அச்சுறுத்தல்கள் காத்திருந்தன. எப்போதும் எதிரியின் தாக்குதலை எதிர்கொள்ளவேண்டிய அச்சுறுத்தல்களுக்கும் அதை முறியடித்துவிடும் விழிப்புணர்வுடனேயே அவர்களின் பணிகள் ஒவ்வொன்றும் நிறைவேறின.



ஒவ்வொரு அணிகளுக்கும் இடையே கிலோமீற்றர்க் கணக்கில் நீண்டு விரிந்திருக்கும் காட்டை ஊடறுத்து நுழைவதற்கு அவனது கால்களைத் தவிர வேறு எந்த வாகனத்தையும் பயன்படுத்த வசதியில்லை. அவன் பயன்படுத்துவதுமில்லை. அனைத்து இடங்களிற்கும் ஓயாது அவன் நடந்து செல்வான். வியர்வை சிந்தச்சிந்த மூச்சு வாங்க வாங்க அவனது நடை தொடர்ந்தது. அந்தக் காட்டுப்பகுதியில் இவன் கால்படாத இடம் இல்லையென்றே சொல்லலாம்.

நீண்ட நடையும் அவனது ஓயாத உழைப்பும் அவனின் விடுதலைக் கனவினைப்போல வைரம் பெற்றிருந்தன. சிறுசிறு தாக்குதல்களைச்செய்து எமது கால்களைத் திருமலைக்காட்டில் வலுவாகப் பதித்துக்கொண்டிருக்கவே, அணிகள் எதிர்கொள்ளவேண்டிய நெருக்கடிகளும் பெருகிக்கொண்டே இருந்தன.

ஒருவேளை உணவுக்கே காத்திருக்கவேண்டியும் உணவு எடுக்கச்சென்று சண்டையிட வேண்டியதுமான சூழல் இறுக்கத்தில் இருந்தாலும் கில்மனின் அன்பும் அரவணைப்பும் ஒவ்வொரு போராளியையும் உறுதியான உளவுரணோடு இருக்கச்செய்தது. எப்போதும் எளிமையாய் உடையணிந்துகொண்டு எல்லோருடனும் அன்பாய்ப் பழகிக்கொண்டிருக்கும் அவன்தான் குறுகிய காலத்தில் அந்தப் பிரதேசத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினான்.

ஆங்காங்கே எதிரிகள்மேலே தாக்குதல்கள் மேற்கொண்டு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. திறமையோடு சண்டைசெய்த வீரர்களை இதய நிறைவோடு பாராட்டி அடுத்த சண்டைக்கு அனைவரையும் தயார்படுத்துவான்.

நீண்ட காத்திருப்பின், பெரும் சிரமத்தின் பின் கிடைக்கின்ற அளவுச் சாப்பாட்டைச் சாப்பிடுவதற்காக கில்மனும் ஒரு போராளியைப்போல சமையற்கூடம் வந்து காத்துக்கொண்டிருப்பான். கையில் ஒருகோப்பையோடு, அமருவதற்கு வசதியான ஒரு மரக்குற்றியில் அமர்ந்தபடி எங்காவது தூரச்சிந்தித்துக் கொண்டிருப்பான்.

மரக்குற்றியில் அமர்ந்திருக்கும் அவனது நெஞ்சில் ஒரு மூலையில் பழைய

(தொடர்ச்சி மறுபக்கம்)



www.eelamview.com

# மூத்த உறுப்பினர் லெப்.கேணல் அப்பையா அண்ணா



எமது இயக்கத்தின் மூத்த அங்கத்தவர்களுள் ஒருவரான லெப்.கேணல் அப்பையா அவர்களின் வீரச்சாவுச் செய்தி உறுதி செய்யப்பட்டுள்ளது. 27.12.1997 அன்று மல்லாவிப் பகுதியில் காணாமல் போயிருந்த அவருக்கு நேர்ந்த கதியறியாது இன்றுவரை எமது தேசம் தவித்திருந்தது.

அது "ஜெயசிக்குறு" நடவடிக்கைமூலம் சிங்களப் படைகள் வன்னியில் அகலக் கால்பதித்திருந்த நேரம். வயதால் முதிர்ந்து நோய்களால் தளர்ந்துபோயிருந்த அப்பையா அண்ணனை சிறிலங்காப் படைகளின் கைக்கூலிகள் கடத்திச் சென்றுவிட்டனர். அன்றிலிருந்து அவரைத்தேடி எங்கும் வலைவிரித்திருந்தோம்.

அப்பையா அண்ணை எமது இயக்கத்தின் ஆரம்பகாலச் செயற்பாடுகளின் சாட்சியாக இருந்தவர். மக்களுடன் மக்களாக தலைமறைவு வாழ்வில் எமது இயக்கம் வாழ்ந்த காலங்களில் எமது போராளிகளுக்குப் பெரும் பலமாக இருந்து செயற்பட்டவர். அன்றைய காலங்களில் கண்ணிவெடி உட்பட்ட வெடிபொருள் உருவாக்கத்தில் முன்னின்று செயற்பட்டவர்.

அன்றைய நாட்களில், இளையவர்களாகிய எமது போராளிகளிடையே வயது முதிர்ந்தவரான அப்பையா அண்ணை சிங்களப் படைகளின் கண்களில் மண்ணைத் தூவி எமது தலைவர் உட்பட்ட ஆரம்பகாலப் போராளிகளைக் காத்துவந்தார். தாக்குதல்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நகர்வுகளுக்குத் தேவையான வாகனங்களை மக்களிடமிருந்து ஒழுங்கு செய்வது, எவரும் சந்தேகம் கொள்ளாதவாறு போராளிகளுக்குரிய தங்ககங்களை ஒழுங்கு செய்வதென அன்றைய காலங்களில் முக்கியத்துவமான பணிகளை மூத்த போராளியான அப்பையா அண்ணை ஆற்றினார்.

1982 - ஆம் ஆண்டுகாலப் பகுதியில் பொன்னாலைப் பாலத்தில் வைத்து சிங்களப் படையினரின் வாகனம் ஒன்றின்மீது எமது போராளிகளால் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டது. ஆனால் தாக்குதலுக்கிலக்கான எதிரி வாகனம் மயிரிழையில் தப்பித்துவிட்டது. தப்பிக்கொண்ட எதிரிகள் எமது போராளிகளைத் துரத்தியபடி அவ்விடத்தைச் சூழவும் சல்லடை போட்டனர். தாக்குதலுக்காகப் பயன்படுத்தப்பட்ட மின் பிறப்பாக்கி எதிரியின் கையில் சிக்கிவிட்டது. அதை வல்வெட்டித்துறையிலுள்ள கடையொன்றில் கொள்வனவு செய்திருந்த இராசையா என்ற அப்பையா அண்ணை அன்றிலிருந்து யாழ்ப்பாணம் எங்கணும் பிரபல்யமாகத் தேடப்பட்ட ஒருவரானார்.

1983 - ஆம் ஆண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருநெல்வேலித் தாக்குதலில் பங்குபற்றிய போராளிகளுள் அப்பையா அண்ணையும் ஒருவர். தமிழர்களின் விடிவிற்கான போரின் படிக்கட்டாக அமைந்த அந்தக் கண்ணிவெடியின் பொறிமுறைகளைச் சரிபார்த்து செல்லக்கிளி அம்மானின் கைகளில் ஒப்படைத்திருந்தவர் அவர்தான். அந்த வரலாற்றுத் தாக்குதலின் நினைவுகளை மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்கள் 'களத்தில' என்ற ஏட்டில் எழுதியிருந்தவற்றை மீட்டிப்பார்ப்பது இங்கு பொருத்தமாக இருக்கும்.

"1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் நாள் இரவு 11.00 மணியளவில் யாழ் திருநெல்வேலியில் வைத்து சிறிலங்காப் படையினர்மீது ஒரு கண்ணிவெடித் தாக்குதலை நடத்தவென குறிப்பிட்ட வாகனமொன்றில், தேசியத்தலைவர் அவர்களும் அவருடன் செல்லக்கிளி அம்மான், விக்டர், பொன்னம்மான், சந்தோசம் மாஸ்ரர், புலேந்தியம்மான், கணேஸ், ரஞ்சன், லிங்கம், பசீர்காக்கா, நான் மற்றும் சில தோழர்களும் அடங்கிய எமது தாக்குதல் குழுவில் ஒருவராக சுமார் ஐம்பது வயதை அடைந்துவிட்ட அப்பையா அண்ணரும் அங்கம் வகித்தார். நாம் திட்டமிட்டபடி தாக்குதலுக்கான குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் எல்லோரும் வாகனத்தைவிட்டு கீழே இறங்குகிறோம். எனவே அடுத்ததாக அங்குள்ள ஓர் இடத்தில் கண்ணிவெடித் தொகுதியைப் புதைக்கவேண்டும். அப்பையா அண்ணரும், செல்லக்கிளி அம்மானும், விக்ரரும் கண்ணிவெடிகளைப் புதைக்க ஆரம்பிக்கின்றனர்.

"கண்ணிவெடியைப் புதைப்பதென்பது ஒரு பெரிய வேலை. அதாவது கரடுமுரடான தார்றோட்டில் பிக்கானால் கிடங்கு வெட்டுவதென்பது மிகவும் கடினமானது. அதிலும் கண்ணிவெடித் தொகுதிக்கான வெடிமருந்துகளை அடைப்பதென்பது அதைவிடப் பெரியவேலை. ஏனெனில் வெடிமருந்துகள் ஆபத்தானவை. எல்லோருக்கும் அந்தவேலை ஒத்துவர மாட்டாது. எனவே வெடிமருந்துடன் நன்கு பழக்கப்பட்ட அப்பையா அண்ணர் அவ்வேலையை திட்டத்திற்கேற்ப மிகவும் வேகமாகவும் அதேவேளை நிதானமாகவும் திறம்படச் செய்துமுடித்தார். இவைக்கப்பால் அப்பையா அண்ணர் எமது இயக்கத்திலேயே மிகவும் வயது முதிர்ந்த மூத்த உறுப்பினர் ஆவார். இருந்தபோதிலும் அவர் மிகவும் சுறுசுறுப்பாகவும் விவேகத்துடனும் சதா இயங்கிக்கொண்டிருப்பார். அத்தோடு எமது உள்ளூர்த் தயாரிப்புகளில் ஓர் முக்கிய வெடிமருந்து நிபுணராகவும் அவர் விளங்கினார்." என மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்கள் அதில் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பின்னான காலங்களில் இந்தியாவிற்குப் பயிற்சிக்குச் சென்ற போராளிகளுடன் அப்பையா அண்ணையும் ஒருவராக இணைந்திருந்தார். எப்படியாவது தானுமொரு இராணுவப் பயிற்சிபெற்ற விடுதலை வீரனாக உருவாகவேண்டுமென்று அவர் ஆவல் கொண்டிருந்தார். ஆனால், இவரது வயதைக் கருத்தில்கொண்ட இந்தியப் பயிற்சி அதிகாரிகள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். இருந்தபோதும் நாடு திரும்பிய அப்பையா அண்ணை போராளியாகவே தொடர்ந்தும் பணியாற்றினார். அவரது விடுதலைப் பணிக்கு இராணுவப் பயிற்சி என்றுமே ஒரு தடையாக இருந்ததில்லை. ஆரம்ப காலங்களில் எமது தாக்குதல்களில் பங்கெடுத்த கண்ணிவெடிகள் பல அப்பையா அண்ணனின் கரங்கள் தழுவப் பெற்றவை. வன்னிப் பகுதியில் நடந்த பல தாக்குதல்களிலும் அவர் பங்கெடுத்திருந்தார்.

அப்பையா அண்ணனின் கண்டுபிடிப்பு முயற்சிகள் இயக்கத்தில் என்றும் பிரபலமாகப் பேசப்படுபவை. அவற்றில் பல களத்தில் பயன்படுத்தப்படாதவையாக இருந்தபோதும்கூட இளம் போராளிகளிடையே அத்தகைய முயற்சிகளை ஊக்குவித்து இயக்கத்தில் அத்தகைய ஒரு மரபை வளர்த்தெடுக்கும் தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு அப்பையா அண்ணையின் அத்தகைய முயற்சிகள் வாய்ப்பாக அமைந்தன. அது பின்னைய காலங்களில் இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.

பிற்காலங்களில் அந்த முதிய போராளி நன்றாக இழைத்துப்போயிருந்தார். எந்தப் பணியாற்றவும் அவரால் முடியாதிருந்தது. என்றாலும் எமது வரலாற்றுப் பெருமைக்குரியவராய் அவர் இருந்தார். அவரை இயன்றவரை பேணிப்பாதுகாக்க நாம் முயன்றோம். அதனால்தானோ என்னவோ எதிரியும் அவரது வாழ்வை முடிக்க விரும்பினான் போலும். இப்போது அப்பையா அண்ணை எங்களுடன் இல்லை. என்றாலும் அவர் எமது புகழ்பூத்த விடுதலை வரலாற்றில் என்றென்றைக்கும் வாழ்வார். ■

# வீரியமுள்ள விதை

(10ம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுகளும் உட்கார்ந்திருக்கும். சிலநாட்களில் தள்ளாடும் முதியவரின் நடையைப்போல தளர்ந்த நடையில் நினைவுகள் உலாவத்தொடங்கும்.

அவன் இந்தப் போராட்டத்தில் பங்களிப்புச்செய்த ஆரம்ப நாட்களும் பின் ஊருக்கு இந்தக்கதை கசிந்தபோது அவன் எதிர்கொள்ளவேண்டியிருந்த அச்சுறுத்தலும் எங்கோ தூரங்களில் ஒரு நாடகம் நடப்பதைப்போல அவனை உணரவைக்கும். உறவுகள் ஒவ்வொன்றின் குரலும் தொலைவிலிருந்து கேட்பதாய் இருக்கும்.

சின்ன வயதிலேயே அவன் இயக்கத்தில் ஆதரவாளனாகத் தீவிரமாய் உழைத்தபோது இந்திய இராணுவம் அவனைப் பின்தொடர ஆரம்பித்தது. அவனும் அவனது குடும்பமும் எதிர்கொண்ட துன்பங்கள்... பின் அனைத்துத் துயரங்களுக்கும் தீர்வு காணவேண்டுமென்ற இலட்சியத்தோடு போராட்டத்தில் இணைந்துகொண்டான். (13.07.1990). இப்படி நினைவுகள் அலைமோதும் பயிற்சிப் பாசறையில் ஒவ்வொரு பயிற்சியிலும் திறமையான அவனின் செயற்பாட்டால் அவனின் விடுதலைப்பற்று நிலையைச் சரியான முறையில் இனங்கண்டுகொள்ள வைத்தது பாசறையில் அவனுடைய பொறுப்பாளர்களால்.

எதிர்காலத்தில் ஒரு தளபதியாக வரப்போகும் இந்த விதை ஆரம்பத்திலேயே வீரியமுள்ளதாகவே வெளிவந்தது. அந்த விருட்சத்தை, அதன் விலாசத்தை அது உருவாக்கப்போகும் விசாலத்தை ஆரம்பத்திலேயே இனங்காட்டியது அவனின் இயல்புகளும் செயல்களும்.

அதற்குப்பின் அவனுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தில் அவன் காட்டிய திறமை, தொடர்ந்துவந்த களவாழ்வில் வெளிப்பட்ட அவனது தனித் தகைமை, அதனால் ஆரம்பத்தில் பயிற்சி ஆசிரியனாய், பின் விநியோகப் பொறுப்பாளனாய், வேவு அணிகளின் நடத்துனனாய் அவன்பணி வளர்ச்சிப்படியில் ஏறிக்கொண்டிருந்தது. அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரிப் படிப்பு முடிந்து வந்ததும் அவன் ஏற்றுக்கொண்ட 'பலவேகய-2'ற்கான விநியோக நடவடிக்கை இவனை ஒருதளபதி என்று கூறக்கூடியளவு ஆளுமை நிறைந்ததாக உருவாக்கியிருந்தது. போராட்ட வாழ்வின் அந்த ஆரம்பப் பகுதியிலேயே தலைவருக்கு அவனை இனங்காட்டியது.

பின் 1992ஆம் ஆண்டு மாவீரர் நாளுக்கான சமராக அமைந்த வளலாய்த் தொடர் காவலரண் மீதான தாக்குதல் நடவடிக்கையில் ஒருபகுதிக்குக் கட்டளை வழங்குபவனாக கில்மன் நியமிக்கப்பட்டபோது, அந்தச்சமரின் முடிவில் அவனது போர்த்திறமை, கட்டளை வழங்கும் ஆற்றல் சந்தேகத்திற்கு இடமற்றவாறு நிரூபிக்கப்பட்டன. மூத்த தளபதிகளால் பேசப்படுபவனாக கில்மன் மாறினான். இதன் படிநிலை வளர்ச்சியின் உயர்வாய், தலைவரின் நம்பிக்கையின் வெளிப்பாடாய் பின்னாளில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியாய் கில்மன் நியமிக்கப்பட்டு தலைநகர்க் காடுகளில் அவன் கால்கள் நடந்தன.

ஓய்வறியாத அவன், வரைபடத்தை விரித்துப் பார்த்தபடியோ அல்லது எழுதுவதற்கும் வாசிக்கவும் தெரியாத போராளிகளுக்கும் பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டோ இருப்பான். அங்கே எதிர்கொண்ட தாக்குதல்கள் ஒவ்வொன்றிற்கும்பின் கில்மனின் முகமே சிரிப்போடு தெரியும்.

காடு எதிரியின் வசமிருந்து எமது வசப்பட்டபோது அதனைச் சகித்திருக்கமுடியாத எதிரி அதனால் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய சிக்கல்களை உணர்ந்தவனாய் திருமலை வந்திருக்கும் எமது தாக்குதல் அணியிடமிருந்து காடுகளை நோக்கிப் பெருமெடுப்பிலான இராணுவ நடவடிக்கை ஒன்றிற்குத் திட்டமிட்டான். 31.05.1995 'ராமசக்தி-03' என்ற இராணுவ நடவடிக்கை எமது வசமிருந்த காடுகளை நோக்கி அலைபுரண்டு வந்தது. கில்மன் இதனை முன்னுணர்ந்து இருந்தானோ என்னவோ உடனே செயலில் இறங்கினான். தனது அணிகளை எதிர்ச் சமரிற்குத் தயாராக்கினான். செயல்முறைத் தாக்குதல் திட்டத்தை வகுத்து அதனை விளங்கவைத்தான். முன்னேறிவந்த எதிரிக்கு மூக்குடைத்து அனுப்பும் நோக்கத்தோடு அணிகளை வழிநடத்தினான் கில்மன்.

அலைபுரண்டதுபோல் காடுகளில் முன்னேறிய எதிரிப்படை துவண்டுபோய் பின்வாங்கியது. சும்மாவல்ல, தனது கேணல் தர, கப்டன் தர அதியுயர் அதிகாரிகளையும் இழந்து பத்துப் படையினரின் உடல்களையும் விட்டு, ஆயுதங்களையும் கைவிட்டு அவமானத்தைக் கையிலேந்தியவாறு அவர்களைப் பின்வாங்க வைத்தான் அன்று கில்மன். அரசதரப்பு பதினேழுபேர் தம்மில் கொல்லப்பட்டும் 35பேர் காயமடைந்ததாகவும் பலர் காணாமல் போயுள்ளதாகவும் கூறி விடையத்தைச் "சடைய" முனைந்தது. சிறிய அணி. பெரியசமர். வெற்றி சாதாரணமானதல்லவே! ஆனால், ஒருநாள் (28.06.1995) செய்தி வந்தது.

தலைநகரில் சீலனின் பெயர் தாங்கிய படையணியைத் தலைவனின் எதிர்பார்ப்பிற்கு அமைய வெற்றிநடை போட வைத்து எம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்திக்கொண்டிருந்த கில்மன் வீரச்சாவாம். எதிரிமீது தாக்குதல் நடத்த முயன்றபோது வெடிவிபத்தாம். அவனை அறிந்தவர்களுக்கு இடிவிழுந்ததுபோல் இருந்தது. இனிக் கில்மன் என்றொருவன் இல்லை... இனிக் கில்மனின் ஆளுமை உயராது?!... கில்மனின் ஆற்றல் இனிப்பெருகாது?!... அந்த வெடிமருந்து பொய்த்துப் போயிருந்தால்... எவ்வளவு நன்றாய் இருக்கும்!... மனம் நப்பாசையில் துடித்தது. ●



www.eelamview.com

## மேற்குலகமும் ஏமாற்றப்படுகிறது பலியிடப்படுவது தமிழர் மட்டும்தான்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. ஆனால், இப்போது பனிப்போர் இல்லாத சூழலில் இப்படி நிதியுதவி வழங்கும் நாடுகளின் ஆதரவையும் மேற்குலகின் ஆதரவையும் அறுத்து விடக்கூடியது சாத்தியப்படக் கூடிய தல்ல. ஆனால் சமாதானத்தை உடைப் பதன்மூலம் மேற்படி நிதி வழங்கலை வீழ்த்தி ரணிலை வீழ்த்தலாம் என்பதே சு.க வின் கணிப்பீடு. அப்படியென்றால் ரணிலை வீழ்த்துவதற்கான ஒரு மார்க்கத்தை தேடக்கூடிய ஒரேயொரு இடம் இனப்பிரச்சினைதான்.

இதில் இருபெரும் கட்சிகளி னதும் இலக்கு தமது அரசியல் ஆதிக் கத்திற்கான போட்டியை நடாத்துவதற் கான களமாக இனப்பிரச்சினையை பயன்படுத்துகின்றனர் என்பதுதான். இதில் இருகட்சியினரும் சமாதானம் பற்றிப் பேசினாலென்ன சண்டைபற்றிப் பேசினாலென்ன தமது அரசியல் ஆதிக்கத்திற் கான ஒரு மூலவளமாக இனப்பிரச்சினையைக் கையாள்கின் றனர் என்பதுதான், அதில் தமிழரை பலியிடுகின்றனர் என்பதுதான்.

இதில் கவனிக்கவேண்டிய பிர தான விடயம் என்னவென்றால் இரு பெரும் கட்சிகளும் ஏறக்குறைய சமபலம் பெற்றுள்ளன. ஆதலால் ஒன்றை ஒன்று சாட்டியும் ஒன்றுக்கொன்று எதிராக நடந்தும் அவற்றால் வெளியுலகின் ஆதரவைப் பெறமுடிகிறது என்பதுதான் யதார்த்தமாக உள்ளது. அவர்கள் வெளியுலகின் ஆதரவைப்பெறும் ஒவ்வொரு கட்டத்திலும் எவ்வளவு தூரம் தமிழர்களைப் பாதிக்கமுடியுமோ அவ்வளவுதூரம் அதைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இவ்வாறான பயன்படுத்தல் களின் போதெல்லாம் அப்பட்டமாக ஏமாற்றுக்கள் எனத் தெரியவரும் போதி லும்கூட அரசியல் யாப்பை சாட்டாகச் சொல்லி தம் ஏமாற்று நாடகத்தை அவர் கள் அரங்கேற்றி விடுகிறார்கள். அதா வது சோல்பரி யாப்பு தமிழருக்கு பாதக மாகி பின்பு தமிழர்கள் அதற்கெதிராக போராடியபோது அந்த யாப்பில் காணப் பட்ட மிகச்சிறிய அனுகூலங்களைக்கூட அடுத்தகட்ட சிங்களத் தலைவர்கள் மீறியதுடன் பின்பு மொத்தத்தில் அந்த யாப்பைவிடவும் மேலும் கடினமான இன்னொரு யாப்பை உருவாக்கினார்கள்.

சோல்பரி யாப்பில் இருந்த செனற்சபை சிறுபான்மையினர்களின் நலன் பொருட்டு குறைந்தபட்சம் குரலெ ழுப்பும் ஒரு அரங்கமாகவாவது இருக்கக் கூடாது என்பதற்காக 1970ஆம் ஆண்டு அந்த செனற்சபையை ஒழித்து விட்டனர். அத்துடன் 1972ஆம் ஆண்டு யாப்பு முற்றிலும் தமிழரின் நலன்களை வலிமையாகப் பாதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. அதில் தேர்ந் தெடுக்கப்பட்ட தமிழரின் தலைமைகளின் நிராகரிப்புகளை சிறிதும் பொருட்படுத் தாது அந்த யாப்பை அமுல்படுத்தினர். அடுத்து 1978ஆம் ஆண்டு இன்னொரு யாப்பை கொண்டுவந்தனர். அது அதிகம் நெகிழ்ச்சியற்றதாயும் மாற்றங்களுக்கு விட்டுக்கொடாததாயும் தமிழரின் நலன் களுக்குப் பாதகமாயும் உருவாக்கப் பட்டது. இதனையும் தமிழர்கள் முழு அளவில் எதிர்த்தனர். இவ்வாறு தமிழர் களுக்கு எதிராக பெரும் இனப் பெரும் பான்மையைப் பயன்படுத்தி ஒவ்வொரு முறையும் மேலும்மேலும் பாதகமான யாப்புகளை உருவாக்கினர். அந்த யாப்புகளிற்கும் அவற்றினால் உருவாக் கப்பட்ட தமிழ்மக்களின் ஒடுக்குமுறைக் கும் எதிராகவே தமிழ்மக்கள் ஆயுத மேந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

எந்த யாப்புகள் தமிழ்மக்களிற் கெதிராக வலுவுடன் வளர்ந்தனவோ, எந்த யாப்புகளை தமிழர்கள் பிழை யென்று ஏற்க மறுத்தார்களோ அந்த யாப்புகள் அனைத்தினதும் திரட்சியாக இருப்பதே 1978ஆம் ஆண்டு யாப்பு. எந்த பிழையான யாப்பிற்கெதிராக தமிழர்கள் மென்வழியில் போராட நேர்ந்ததோ பின்பு ஆயுதம்தாங்கி போராட நேர்ந்ததோ அந்தப் பிழையான யாப்பையே முன்னிறு த்தி யாப்பிற்கும் சட்டத்திற்கும் உட்பட்ட அணுகுமுறையென்று கூறி தமிழ் மக்களை அவற்றிற்குக் கட்டுப்படுமாறும் கோரி அவ்வாறு கட்டுப்படுவதையே சமாதானமென்றும் விபரிக்கிறார்கள்.

இப்படியொரு பிழையான விளக் கத்தை அவர்கள் வெளிநாடுகளுக்கு இலகுவாக முன்வைக்கிறார்கள். எந்த யாப்பு தமிழருக்கெதிரானதோ அந்த யாப்பிற்கு உட்பட்டு தமிழர்கள் எவ்வாறு தீர்வுகாண முடியும். அதாவது இங்கு யாப்பைப்பற்றி பேசுவதெல்லாம் சர்வ தேச சமூகத்திற்கு கண்களில் மண் ணைத்தூவும் ஒரு நடவடிக்கைதான். இந்த இடத்தில் இருபெரும் அரசியல் கட்சிகளும் தமக்குள் போட்டியிட்டு சாதிப் பது ஒரு விடயத்தைத்தான். அது தமிழர் களைப் பலியிடுவதுதான். அதாவது ஒருவரையொருவர் சாட்டி இருவரும் சர்வதேச சமூகத்தையும் தமிழரையும் ஏமாற்றி இறுதியில் தமிழரை பலி



யெடுத்துவிடுகிறார்கள்.

இந்த இருபெரும் கட்சிகளும் ஒருவரையொருவர் சாட்டி இறுதியில் பலியிடுவது தமிழரையே. இத்தகைய போக்கிற்கு சர்வதேச சமூகமும் துணை போகப்போகிறதா என்பதே கேள்வி. அதாவது சர்வதேச சமூகம் சமாதான த்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் அவர்கள் அழுத்தம் கொடுக்கவேண்டியது இருபெரும் சிங்களக் கட்சிகள் மீதேயன்றி தமிழர் பக்கமல்ல. அதாவது நிதி விடயத் திலும் இராணுவ விடயங்களிலும் கொழும்பிற்கு, இருபெரும் கட்சிகளுக்கு உதவமுடியாதென்ற நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் எடுக்குமானால் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றையொன்று சாட்டமுடியாது. இருபெரும் கட்சிகளை யும் தமிழ்மக்களின் உரிமைபற்றி ஒரே முடிவிற்கு வரவைக்கக்கூடிய வல்லமை இலங்கையின் இன்றைய நிலையில் சர்வதேச சமூகத்திற்கு உண்டு. ஏனெ னில் வெளிநாட்டு நிதி, இராணுவ உதவியின்றி எந்தவொரு கட்சியாலும் இலங்கையை நிருவகிக்கமுடியாது.

நிலைமை இப்படியிருக்கும் போது பிரச்சினை தமிழ்மக்கள் போராட்டத்தை கைவிடுவதென்பதல்ல. பிரச்சினையைத் தீர்த்தால் போராட்டம் தானே தேவையற்றதாகிவிடும். நோயாளிக்கு மருந்து கொடுப்பதற்குப் பதிலாக நோயைப்பற்றி வாய்திறவாதே என்று சொல்லுவதல்ல தீர்வு.

இப்பின்னணியில் சிங்கள ஆட்சியாளர்கள் யாரையும் நம்பமுடியாத நிலையில்தான் தமிழர்கள் உள்ளனர். ஏனெனில் கடந்தகால வரலாற்று அனுபவம் அவ்வாறானதே. ஒரு பத்தி எழுத்தாளர் கூறியதுபோல "நெகிழாத சிங்கள யாப்பிற்குள் தமிழரை நெகிழுமாறு கேட்பதல்ல தீர்வு" மொத்தத்தில் சிங்கள ஆட்சியாளர்களின் முழுநீள தந்திரமான வரலாற்றையும் அவர்களின் சமாதானத்தின் மீதான விசுவாசம் இன்மையையும் கருத்திற் கெடுத்துக்கொண்டே சர்வதேச சமூகம் தமிழர்களை நோக்கவேண்டும். மாறாக சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் சிங்கள இனவாதத்தை பலப்படுத்தக் கூடிய வகையில் அமையுமானால் அது யாருக்கும் நன்மை பயக்கப்போவ தில்லை. ●

---

## துணுக்குக் காட்டி

"கொழும்பில் உயர்பாதுகாப்பு வலயங்கள் எல்லாம் அகற்றப்பட்டு நிம்மதியும் மகிழ்ச்சியும் கொண்ட இயல்பான வாழ்வு நிச்சயமாகவுள்ளது. ஆனால், எங்கள் வீடுகள் இன்னமும் சுத்திபடைக்கப்பட்ட முள்ளுக்கம்பிகளின் பின்னால் இருந்து கிடக்கிறது."

"அதிகாலையில் எழுந்து முற்றத்துக்கு வந்தால் முகத்திற்கு நேரே இன்னமும் நீட்டிய துப்பாக்கிக் குழல்களும் கரும்பச்சை உடைகளும். நாம் களைத்துப்போனோம் இயல்புநிலை திரும்பும் என்றிருந்து ஏமாந்து போனோம். மீண்டும் எமது செவிகளில் 'ஷெல்' சத்தங்களும், 'பொம்மர்' இரைச்சல்களும் கேட்பதுபோல் இருக்கிறது. எமது நித்திரைகளில் கரிய இருளிற்குள்ளிருந்து பெண்கள் கத்துவது கனவாக வருகிறது."

- யாழ். பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கை. (01.06.2003)

"இராணுவத்தினர் இங்கே இருப்பதனால் நாங்கள் நிம்மதியாக தொழில்செய்ய முடியாதுள்ளது. எங்களுடைய சொந்த வீடுகளுக்கும் செல்ல இயலாதுள்ளது. இத்தனை இன்னல்பட்டுக்கொண்டு இவர்களுக்கு அடிமையாக இருக்க எங்களால் இனியும் முடியாது. இதனால் இவர்கள் எங்களுடைய மண்ணிலிருந்து அகலவேண்டும். இவர்களை அகற்றி நாங்கள் எங்களுடைய வீடுகளுக்குச் செல்ல வேண்டும். அதற்காக அவர்கள் தங்களது வீடுகளுக்குச் சென்றுவிட்டும்".

- யாழ்பல்கலைக்கழக மாணவர் அவனியிடம் கூறியும் மேற்கு கடற்தொழிலாளர்கள் (03.06.2003).

"அவசர மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக சமாதான நடைமுறைகளில் தமிழ்மக்கள் நம்பிக்கையையும், பொறுமையையும் இழந்துவருகிறார்கள் என்பதை உணர்ந்து, முழு சூழ்நிலையையும் மறுபரிசீலனை செய்ய எமது தலைமைப்பீடம் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது."

"சமாதான உணர்வையும், வழமை நிலையை யும் சீரான வாழ்க்கையையும் அனுபவிக்க மக்கள் துடிக்கிறார்கள். அம்மக்களின் கடினமான துயரங்களைப் புறக்கணித்துவிட்டு திருத்தமான தீர்விற்கு கற்பனையான மாதிரிகளை ஆராயும் திசையிலேயே சமாதான நடைமுறைகள் நகர்கின்றன என்று நாம் உணர்கிறோம்"

- அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் 04.06.2003 அன்று சிறிபிரதமரிற்கு எழுதிய கடிதத்தில்.

"உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்கக்கூடாது என்று தென்பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்துவதிலோ, விவாதம் நடத்துவதிலோ பயனில்லை. இடம்பெயர்ந் தோர் முகாம்களில் வாழும் யாழ் மக்கள் கொடுமையான சுகாதாரச் சூழலில் எதிர்பார்ப்பில்லாமல் மோசமான வாழ்க்கை வாழ்கிறார்கள். கழிவுநீர் வாய்க்கால் பகுதிகளில்கூட மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள்..."

- காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன நனது யாழ் விஜயத்தை முடித்து பிரதமர் மற்றும் அமைச்சர்களைச் சந்தித்தபோது..... (08.06.2003, நமது ஈழநாடு)

"இலங்கை அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் மட்டத்தில் செயலாற்றலற்ற தன்மை நிலவுவதாக புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளது உண்மையே. இலங்கையில் திட்டங்களுக்கான நிதி செலவிடுவதிலும், அரசியல் தலையீடுகளால் முடிவுகளை எடுப்பதிலும் பலவீனமானநிலை காணப்படுகிறது. அத்துடன் அதிகாரிகள் மட்டத்தில் அர்ப்பணிப்புத் தன்மையில்லை. இந்தத் தவறுகளை இலங்கை அரச நிவர்த்திசெய்யத் தவறினால் திருத்தமுடியாத கட்டத்திற்கு செல்லவேண்டி வரும்."

- ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி ஆகியவற் றின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகள். (03.06.2003 நமது ஈழநாடு)

"இடைக்கால நிர்வாக சபையைக் கொடுப்பது ஒரு தேசத்துரோகமான செயலாகும். இப்படியான ஒரு செயலில் அரசு ஈடுபட்டால், பௌத்த குருவானவர் களாகிய நாங்கள் மட்டுமல்ல முழுச்சிங்கள மக்களுமே இதற்கெதிராக திரண்டெழுவார்கள். பாதுகாப்புப் படையி னருக்கு தலைமை தாங்குவதும் எமக்குப் புதுமையா னதல்ல."

- மெத்தானந்தா தேரர், ஜாதிக சங்க சம்மேளனய என்ற பௌத்த பிக்குமாரின் தேசிய மாநாட்டுக்குழு ஜனாதிபதியைச் சந்தித்தபோது. (06.06.2003 வீரகேசரி) ●



www.eelamview.com

# யாருக்காக?

—செந்தோழன்—

நாக விகாரைக்கு யாத்திரை
செல்வோருக்கு வேதிடத்தில்
வேலை இல்லை என்பதால்
கண்டி வீதி மட்டும்
கறுப்பாக்கப்படுகிறது.

செம்மணிவெளி
ஊமையாய்க் கிடக்கிறது
அதனுள் நடந்தவற்றையெல்லாம்
மறந்து, மறைத்து
யாழ்ப்பாண வாசலில்
வரவேற்கிறது
வானவில் வர்ணப் பலகைகள்.

சீருடைக்காரரைச் சுற்றி
சிரித்த முகங்களுடன்
செருகிய சேலைகளிற்குள்ளும்
இறுகிய ஆடைகளிற்குள்ளும்
ஆரியகுளத்தடியில
அன்னியரின் எச்சங்கள்.

காரணங்கள் சொல்லப்படாது
விலங்கிடப்பட்டு
விசாரணைகள் செய்யப்படாது
தண்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்
தம்பியைப்பற்றி - என்
தாயுருகி எழுதிய
கண்ணீர் மடலென்
கண்களைக் கரைத்தது.

காணாமல்போன கணவன்
சாகாமல் இருப்பான் என்று
நெற்றிவிட்டிறங்கா குங்குமத்தோடும்
நெஞ்சைவிட்டிறங்கா ஆதங்கத்தோடும்
நிதம் கலங்கும் சோதரியின் சோகமுகம்
நினைவில் வந்தது.

இந்த விலைக்கொருபோதும்
விற்கவில்லை என் பொருட்கள்
என்றுசொல்லிப் பெருமகிழ்வில்
முகமெல்லாம் பல்லாகச் சிரித்துக்கொண்டிருந்தான்
சிலவர்.

உருளைக்கிழங்கு பயிர்செய்த
உரிமையுடைய வாரிவத்தில்
உயர்காப்பு வலயமென்பதால்
அப்பிள் வாங்கி
விற்றுக்கொண்டிருப்பதாய்
ஆறுதல்கொண்டிருந்தான்
அருகில் ஒரு தமிழன்.

காரைநகர் புகுவதற்காய்
காவலரண்முன்
சோதனைக்காய் காத்திருக்கையில்
செய்தித்தாளைத் திருப்பினேன்
கொழும்பில்
சோதனைச் சாவடிகள்
வீதித்தடைகள் யாவும்
விலக்கப்பட்டதாய்ச்
செய்தி கிடந்தது.

தொடர்ந்து படித்தேன்
சீனாவும் சிறிலங்காவும்
மீன்பிடி ஒப்பந்தம் ஒன்றை
ஒப்பேற்றிக் கொ[illegible] நாய்

பாதுகாப்புப் படைகளிற்குப்
பாதுகாப்பு இல்லையென்று
வலைபடுத்த தம்கடலில்
வழி மறிக்கப்பட்டதால்
வறுமையை மறிக்கமுடியாமல்
வாடுகின்ற உறவுகளின்
உருவங்கள் கண்ணில்பட்டது

புனரமைக்கப்படாத தமிழர்
இருப்பிடங்களில் இருந்து
கற்கள் பிடுங்கப்பட்டு
புனரமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன
பழைய காவலரண்கள்

கண் பிதுங்கி சிதறிக்
கூரை குப்புற விழுமிவரை
குண்டெறிந்தவர்கள்
மீளக்கட்டியதைக்
கொடுப்போம் என்று சொல்லிப்
பத்துமுறைக்குமேல் வந்து
பதிந்து சென்றும், பத்துரூபா கூட
இன்றும் கிடைக்கவில்லை
என்று திட்டும் பக்கத்து வீட்டார்
பேச்சு ஒலி காதில் விழுந்தது.

வாழ்விடத்தை வன்பறித்து
வாழ்க்கையினைப் பாழ்படுத்திய
வன்முறைக் கும்பல் வாழ்வதற்காய்
மறுவாழ்வு மறுக்கப்பட்டுப்
பிறர் நிலத்தில் வாழுகின்றோர்
சொந்தமண்ணை காண ஏங்கும்
மனத்துயரம் உறுத்தியது.

நாக விகாரையில்
புத்தரின் பக்தர்கள் இருவர்
பேசிக்கொண்டிருந்தார்கள்
"சமாதானம் சந்தோசமாயிருக்கிறது"
என்று
வானம் அதிரக் கத்தவேண்டும்போல்
இருந்தது
"சமாதானம் சந்தேகமாயிருக்கிறது" என்று.



## வரலாற்றின் இனிய பழிவாங்கல்...

அழிப்புத் தொட்டு தமிழினத்தின் விடுதலைப் படையணியினை உருவாக்கியது வரை யார் செய்து முடித்தார் என்பதும் அவரும் 1970களின் விளைபொருள் என்பதும் வரலாறே. 1972ஆம் ஆண்டின் யாப்பிற்கு எதிராக மாணவர் கிளர்ந்தமை, அவர்களுக்கெதிரான அரசின் அடக்குமுறை, நூற்றுக்கணக்கில் இளைஞர் கைது, தந்தை செல்வா யாப்பினையெதிர்த்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவி விலகியமை என பல்வேறு தொடர் சங்கிலி நிகழ்வுகள் விளைவாக விடுதலைத் தீ பற்றியது. இதற்கெதிராக அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இவற்றின் மூலம் அமைதி வழி முடிவிற்கு வர ஆயுதப் போராட்டம் வழியே இறுதியும் அறுதியுமான வழியென நிருபணமாக பிரபாகரன் எனும் விடுதலைப் பெருவிருட்சம் தளிர் விட்டு வளரலாயிற்று.

இப்போது மூன்றாம் கட்டம் முடியும் கட்டம சிறிலங்காவின் எல்லாப் பாதைகளும் இங்கே வந்து முடிகின்றன. இனி யாப்பினை உருவாக்கி விடுதலைப் போராட்டத்தினை நசுக்க முடியாதநிலை. ஏனெனில் 1978ஆம் ஆண்டு கொண்டு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட்ட அடுத்த யாப்பானது அனைத்து அதிகாரங்களும் குவிக்கப்பட்ட அரசியல் யாப்பு. அதே வேளை இன்னொரு யாப்பு உருவாக வழிவிடாத யாப்பு. இவ்யாப்புக் காலத்திலேயே முன்னெப்போதும் இல்லாத அளவு தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள், படுகொலைகள், வதைகள், பெரும் போர் என்பனவெல்லாம் நடந்தேறின. அதே வேளை இவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்து புலிகள் வெற்றியின் பல சிகரங்களைத் தொட்ட நிலையில்தான் பேச்சுக்கள் தொடங்கின. 1978ஆம் ஆண்டு செப்டெம்பர் ஏழாம் நாள் இக்கொடிய யாப்பு நடைமுறைக்கு வந்த வேளை கொழும்பு இரத்மலானையில் சிறிலங்காவின் ஒரேயொரு அவ்ரோ பயணிகள் விமானம் வெடித்தது. புலிகள் வைத்த நேரக்கணிப்புக் குண்டு மிகச் சரியான நேரத்திற்கு (விமானத்தில் இருந்து பயணிகள் யாவரும் இறங்கிய பின்னர்) வெடித்ததால் விமானம் இருதுண்டாகியது. பின்னர் நாடும் இருதுண்டாகியது.

இப்போதும் புலிகள் நேரம் கணித்து குண்டொன்று வைத்துள்ளார்கள். வெடிப்பொருள் விற்பனரும் அரசியல் நுண்ணுணர்வின் அதிவிற்பனருமான பிரபாகரன் இம்முறை துண்டு வைத்திருப்பது ஆகாய விமானத்திற்கல்ல, அரசியல் யாப்பிற்கு. **ஒற்றையாட்சி முறையை மாற்றாமல், சிங்கக் கொடியை அகற்றாமல், நமோ நமோ தாயே பாடுவதை நிறுத்தாமல் புத்த மதத்திற்கான தனியுரிமையை தாரை வார்க்காமல், அதிகாரங்களை சரி சமமாகப் பங்கிடாமல் நாடு பிளவுபடுவதைத் தடுக்கும் வகையில் அரசியல் தீர்வினைக் காணமுடியாது.** புலிகள் நாகரிகம் கருதி உலகின் கருத்திற்கும் இடம் கொடுத்து இறங்கி வரக்கூடிய மிகக் கடைசி நிலையிது. இதனை உலகும் உணர்ந்துள்ளது; மதித்துள்ளது. அப்படியானால் இதனைச் செய்யவும் அரசியல் யாப்பு அகற்றப்பட வேண்டுமென்றால் புதிய யாப்பு எழுதப்படவேண்டுமென்றால் நாம் என்ன செய்யமுடியும்? அது முடியாத நிலையில் தனது இயல்பான அறிவின் தற்துணி விடைப்படையில் ரணிலுக்கு வழியொன்றினைக் காண்பிக்கின்றார் பிரபாகரன். அவர் என்ன சொல்கிறார்? 'முடிவான தீர்வினைக்கான முடியாவிட்டால் அதற்கான இயலுமையை நீங்கள் பெறும்வரை இயல்பாக, எம்மக்கள் உங்கள் நுகத்தடியில் சிக்காமல் வாழக் கட்டமைப்பொன்றினை கட்டித்தாருங்கள்' என்கிறார்.

குறைந்தளவு இக் கோரிக்கையை நிறைவேற்றவும் யாப்பு மாற்றப்பட வேண்டுமா? யாப்பிற்குப் புறம்பாகச் செய்யமுடியுமா? வி.ரி. தமிழ்மாறன் அவர்கள் சொல்வது போல் சில ஆபிரிக்க தென்னமரிக்க நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது போல் புரட்சிகர வழிகளைக் கைக்கொண்டு யாப்பினை அகற்ற முடியுமா? அல்லது தென்னாபிரிக்க அரசியலாளர் சொல்வது போல யாப்பினை இடைநிறுத்தி இடைக்காலத்திற்கு புதிய யாப்பினை உருவாக்க முடியுமா? அல்லது எதுவும் முடியாது என உரைத்து விட்டு இன்னொரு தேர்தலைச் சந்திப்பதா? இவ்வாறு கேள்வி மேல் கேள்விகள் ரணில், பீரிஸ், மொறகொட மனங்களில் இப்பொழுது எழுகின்றது. சிங்களத்தார் யாப்பினைப் பயன்படுத்தி உருவாக்கிய பூதம் இப்பொழுது அவர்கள் மீதே பாயப்போகிறது. சிக்கலை உருவாக்கியது யாப்பு அது சிக்கெடுக்க உதவுமா? இவ்வாறு கிளம்பும் கேள்விகளே புலித்தலைவன் வைத்துள்ள நேரக்கணிப்புக் குண்டின் டிக் டிக் ஒலியாகும். இதுதான் இனிய பழிவாங்கல் எங்கள் அன்புக்குரிய வாசகர்களே!

இதுவொரு புது மொழி –

'யாப்பெடுத்தவன் யாப்பாலே அழிவான'



www.eelamview.com

# யாருக்காக?

நாக விகாரைக்கு யாத்திரை
செல்வோருக்கு வேறிடத்தில்
வேலை இல்லை என்பதால்
கண்டி வீதி மட்டும்
கறுப்பாக்கப்படுகிறது.

செம்மணிவெளி
ஊமையாய்க் கிடக்கிறது
அதனுள் நடந்தவற்றையெல்லாம்
மறந்து, மறைந்து
யாழ்ப்பாண வாசலில்
வரவேற்கிறது
வானவில் வர்ணப் பலகைகள்.

சீருடைக்காரரைச் சுற்றி
சிரித்த முகங்களுடன்
செருகிய சேலைகளிற்குள்ளும்
இறுகிய ஆடைகளிற்குள்ளும்
ஆசியருளத்தடியில்
அன்னியரின் எச்சங்கள்.

காரணங்கள் சொல்லப்படாது
விலங்கிடப்பட்டு
விசாரணைகள் செய்யப்படாது
தண்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்
தம்பியைப்பற்றி - என்
தாயுருகி எழுதிய
கண்ணீர் மடலொன்
கண்களைக் கரைத்தது.

காணாமல்போன கணவன்
சாகாமல் இருப்பான் என்று
நெற்றிவிட்டிறங்கா குங்குமத்தோடும்
நெஞ்சைவிட்டிறங்கா ஆதங்கத்தோடும்
நிதம் கலங்கும் சோதரியின் சோகமுகம்
நினைவில் வந்தது.

இந்த விலைக்கொருபோதும்
விற்கவில்லை என் பொருட்கள்
என்றுசொல்லிப் பெருமகிழ்வில்
முகமெல்லாம் பல்லாகச் சிரித்துக்கொண்டிருந்தான்
சில்வா.



உருளைக்கிழங்கு பயிர்செய்த
உரிமையுடைய ஊர்நிலத்தில்
உயர்காப்பு வலயமென்பதால்
அப்பிள் வாங்கி
விற்றுக்கொண்டிருப்பதாய்
அலுத்துக்கொண்டிருந்தான்
அருகில் ஒரு தமிழன்.

காரைநகர் புகுவதற்காய்
காவலரண்முன்
சோதனைக்காய் காத்திருக்கையில்
செய்தித்தாளைத் திருப்பினேன்
கொழும்பில்
சோதனைச் சாவடிகள்
வீதித்தடைகள் யாவும்
விலக்கப்பட்டதாய்ச்
செய்தி கிடந்தது.

தொடர்ந்து படித்தேன்
சீனாவும் சிறிலங்காவும்
மீன்பிடி ஒப்பந்தம் ஒன்றை
ஒப்பேற்றிக் கொ[illegible]னாம்

பாதுகாப்புப் படைகளிற்குப்
பாதுகாப்பு இல்லையென்று
வலைபடுத்த தம்கடலில்
வழி மறிக்கப்பட்டதால்
வறுமையை மறிக்கமுடியாமல்
வாடுகின்ற உறவுகளின்
உருவங்கள் கண்ணில்பட்டது

புனரமைக்கப்படாத தமிழர்
இருப்பிடங்களில் இருந்து
கற்கள் பிடுங்கப்பட்டு
புனரமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன
பழைய காவலரண்கள்

கண் பிளந்து சிதறிக்
கூரை குப்புற விழும்வரை
குண்டெறிந்தவர்கள்
மீளக்கட்டித்தரக்
கொடுப்போம் என்று சொல்லிப்
பத்துமுறைக்குமேல் வந்து
பதிந்து சென்றும், பத்துரூபா கூட
இன்றும் கிடைக்கவில்லை
என்று திட்டும் பக்கத்து வீட்டார்
பேச்சு ஒலி காதில் விழுந்தது.

வாழ்விடத்தை வன்பறித்து
வாழ்க்கையினைப் பாழ்படுத்திய
வன்முறைக் கும்பல் வாழ்வதற்காய்
மறுவாழ்வு மறுக்கப்பட்டும்
பிறர் நிலத்தில் வாழுகின்றோர்
சொந்தமனை காண ஏங்கும்
மனத்துயரம் உறுத்தியது.

நாக விகாரையில்
புத்தரின் பக்தர்கள் இருவர்
பேசிக்கொண்டிருந்தார்கள்
"சமாதானம் சந்தோசமாயிருக்கிறது"
என்று
வானம் அதிரக் கத்தவேண்டும்போல்
இருந்தது
"சமாதானம் சந்தேகமாயிருக்கிறது" என்று.

— செந்தோழன்

## வரலாற்றின் இனிய பழிவாங்கல்...

அழிப்புத் தொட்டு தமிழினத்தின் விடுதலைப் படையணியினை உருவாக்கியது வரை யார் செய்து முடித்தார் என்பதும் அவரும் 1970களின் விளைபொருள் என்பதும் வரலாறே. 1972ஆம் ஆண்டின் யாப்பிற்கு எதிராக மாணவர் கிளர்ந்தமை, அவர்களுக்கெதிரான அரசின் அடக்குமுறை, நாற்றுக்கணக்கில் இளைஞர் கைது, தந்தை செல்வா யாப்பினையெதிர்த்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவி விலகியமை என பல்வேறு தொடர் சங்கிலி நிகழ்வுகள் விளைவாக விடுதலைத் தீ பற்றியது. இதற்கெதிராக அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இவற்றின் மூலம் அமைதி வழி முடிவிற்கு வர ஆயுதப் போராட்டம் வழியே இறுதியும் அறுதியுமான வழியென நிருபணமாக பிரபாகரன் எனும் விடுதலைப் பெருவிருட்சம் தளிர் விட்டு வளரலாயிற்று

இப்போது மூன்றாம் கட்டம் முடியும் கட்டம. சிறிலங்காவின் எல்லாப் பாதைகளும் இங்கே வந்து முடிகின்றன. இனி யாப்பினை உருவாக்கி விடுதலைப் போராட்டத்தினை நசுக்க முடியாதநிலை. ஏனெனில் 1978ஆம் ஆண்டு கொண்டு

([illegible]ம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட்ட அடுத்த யாப்பானது அனைத்து அதிகாரங்களும் குவிக்கப்பட்ட அரசியல் யாப்பு. அதே வேளை இன்னொரு யாப்பு உருவாக வழிவிடாத யாப்பு. இவ்யாப்புக் காலத்திலேயே முன்னெப்போதும் இல்லாத அளவு தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள், படுகொலைகள், வதைகள், பெரும் போர் என்பனவெல்லாம் நடந்தேறின. அதே வேளை இவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்து புலிகள் வெற்றியின் பல சிகரங்களைத் தொட்ட நிலையில்தான் பேச்சுக்கள் தொடங்கின. 1978ஆம் ஆண்டு செப்டெம்பர் ஏழாம் நாள் இக்கொடிய யாப்பு நடைமுறைக்கு வந்த வேளை கொழும்பு இரத்மலானையில் சிறிலங்காவின் ஒரேயொரு அவ்ரோ பயணிகள் விமானம் வெடித்தது. புலிகள் வைத்த நேரக்கணிப்புக் குண்டு மிகச்சரியான நேரத்திற்கு (விமானத்தில் இருந்து பயணிகள் யாவரும் இறங்கிய பின்னர்) வெடித்ததால் விமானம் இருதுண்டாகியது. பின்னர் நாடும் இருதுண்டாகியது.

இப்போதும் புலிகள் நேரம் கணித்து குண்டொன்று வைத்துள்ளார்கள். வெடிப்பொருள் விற்பனரும் அரசியல் நுண்ணுணர்வின் அதிவிற்பனருமான பிரபாகரன் இம்முறை குண்டு வைத்திருப்பது ஆகாய விமானத்திற்கல்ல, அரசியல் யாப்பிற்கு. ஒற்றையாட்சி முறையை மாற்றாமல், சிங்கக் கொடியை அகற்றாமல், நமோ நமோ தாயே பாடுவதை நிறுத்தாமல் புத்த மதத்திற்கான தனியுரிமையை தாரை வார்க்காமல், அதிகாரங்களை சரி சமமாகப் பங்கிடாமல் நாடு பிளவுபடுவதைத் தடுக்கும் வகையில் அரசியல் தீர்வினைக் காணமுடியாது. புலிகள் நாகரிகம் கருதி உலகின் கருத்திற்கும் இடம் கொடுத்து இறங்கி வரக்கூடிய மிகக் கடைசி நிலையிது. இதனை உலகும் உணர்ந்துள்ளது; மதித்துள்ளது. அப்படியானால் இதனைச் செய்யவும் அரசியல் யாப்பு அகற்றப்பட வேண்டுமென்றால் புதிய யாப்பு எழுதப்படவேண்டுமென்றால் நாம் என்ன செய்யமுடியும்? அது முடியாத நிலையில் தனது இயல்பான அறிவின் தற்துணிவினடிப்படையில் ரணிலுக்கு வழியொன்றினைக் காண்பிக்கின்றார் பிரபாகரன். அவர் என்ன சொல்கிறார்? 'முடிவான தீர்வினைக்கான முடியாவிட்டால் அதற்கான இயலுமையை நீங்கள் பெறும்வரை இயல்பாக, எம்மக்கள் உங்கள் நுகத்தடியில் சிக்காமல் வாழக் கட்டமைப்பொன்றினை கட்டித்தாருங்கள்' என்கிறார்.

> ஒற்றையாட்சி முறையை மாற்றாமல், சிங்கக்கொடியை அகற்றாமல், நமோ நமோ தாயே பாடுவதை நிறுத்தாமல் புத்த மதத்திற்கான தனியுரிமையை தாரை வார்க்காமல், அதிகாரங்களை சரி சமமாகப் பங்கிடாமல் நாடு பிளவுபடுவதைத் தடுக்கும் வகையில் அரசியல் தீர்வினைக் காண முடியாது.

குறைந்தளவு ' இக் கோரிக்கையை நிறைவேற்றவும் யாப்பு மாற்றப்பட வேண்டுமா? யாப்பிற்குப் புறம்பாகச் செய்யமுடியுமா? வி.ரி. தமிழ்மாறன் அவர்கள் சொல்வது போல் சில ஆபிரிக்க தென்னமரிக்க நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது போல் புரட்சிகர வழிகளைக் கைக்கொண்டு யாப்பினை அகற்ற முடியுமா? அல்லது தென்னாபிரிக்க அரசியலாளர் சொல்வது போல யாப்பினை இடைநிறுத்தி இடைக்காலத்திற்கு புதிய யாப்பினை உருவாக்க முடியுமா? அல்லது எதுவும் முடியாது என உரைத்து விட்டு இன்னொரு தேர்தலைச் சந்திப்பதா? இவ்வாறு கேள்வி மேல் கேள்விகள் ரணில், பீரிஸ், மொறகொட மனங்களில் இப்பொழுது எழுகின்றது. சிங்களத்தார் யாப்பினைப் பயன்படுத்தி உருவாக்கிய பூதம் இப்பொழுது அவர்கள் மீதே பாயப்போகிறது. சிக்கலை உருவாக்கியது யாப்பு அது சிக்கெடுக்க உதவுமா? இவ்வாறு கிளம்பும் கேள்விகளே புலித்தலைவன் வைத்துள்ள நேரக்கணிப்புக் குண்டின் டிக் டிக் ஒலியாகும். இதுதான் இனிய பழிவாங்கல் எங்கள் அன்புக்குரிய வாசகர்களே!

இதுவொரு புது மொழி -

'யாப்பெடுத்தவன் யாப்பாலே அழிவான'



www.eelamview.com

> "உயர்ந்தவர்கள் நாமெல்லோரும்
> உலகத்தாய் வயிற்று மைந்தர்
> நசிந்து இனி கிடக்கமாட்டோம்
> நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்"

# பொங்குதமிழ்

ஒடுக்கப்பட்டவர்களின் ஆதிப்பாடல்போல அது மேடையில எழுப்பப்படும் கணம்தோறும் நாடி நரம்புகள் சூடேறி விபரிக்க முடியாத உற்சாகத்தை ஊட்டுகிறது. அதுதான் ஒடுங்கிப் போயிருக்கும் உணர்வுகள் கட்டறுந்து விரிந்த வானத்தில் பறக்கத்துடிக்கும் சுதந்திரத்தின் அவாவாக இருக்கவேண்டும்.

சூழப்பட்ட துப்பாக்கிகளுக்குள் நின்று, காவலரண்களுக்குள் நின்று, முட்கம்பிகளுக்குள் நின்று, கொல்லப்படும் வாழ்வுக்குள் நின்று நாங்கள் எப்படி வாழ்கிறோம் என்பதை மைதானத்தில் மாதிரி வடிமமைத்து உலகுக்கு உண்மையை வெளிப்படுத்திய அடக்கப்பட்ட மக்களின் அடங்காத்தனத்தின் நெருக்கரமாக அன்று **(17.01.2001)** 'பொங்கு தமிழ்' வெளிப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் புத்திஜீவிகள் சமூகத்தால் இது முன் கை எடுக்கப்பட்டபோது அதற்கிருந்த கனதியாலும், காத்திரத்தாலும் சர்வதேச அளவில் சிங்கள அரசாங்கத்தால் செய்யப்பட்ட பொய்மைப் பிரச்சாரத்தின் சுவர்களில் சம்மட்டி அடியாக விழுந்தது. பின்னான காலத்தில் நடந்த 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள் தமிழரின் அரசியல் பலமாக வெளிப்பட்டது.

தமிழர்களின் அரசியல் அபிலாசைபற்றி பொய்யான கற்பிதம் செய்தவர்களுக்கும், பொய்யான கற்பிதத்தை சர்வதேசத்திற்குக் கொடுக்கமுடியும் என நம்பி எத்தனம் எடுத்தவர்களுக்கும் அன்று அது பேரிடியாக இருந்தது.

இறுதியாக 27.06.2003 அன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மைதானத்தில் நடந்து முடிந்த 'பொங்குதமிழ்' நிகழ்வு யாழ்ப்பாணத்தின் வரலாறு காணாத மக்கள் திரளைக் கண்டது. அதன் கோஷத்திற்கு அத்தகையதொரு வலிமை இருந்திருக்க வேண்டும். அதுவே மக்களை வீடுகளிலிருந்து வெளிக்கிளப்பி வந்தது.

"நாங்கள் எங்கள் வீடுகளுக்குப் போகவேண்டும். நீங்கள் உங்கள் வீடுகளுக்குப் போங்கள்." இராணுவத்தை நோக்கி எழுப்பப்பட்ட இந்தக் கோஷம் ஒரு கட்டளை வலுமிக்கதாக உணர்த்தப்படுவதற்காகவே மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளிக்கிளம்பி மைதானத்திற்கு வந்தனர். எல்லா வயதினரும், எல்லா சமூகத்தினரும் ஒரு கோஷத்தின் கீழ் அணிதிரண்டனர்.



> "எமது நிலம் எமக்கு வேண்டும்"

அவர்கள் தங்கள் பலமாக தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தை கையில் ஏந்தி நின்றனர்.

உள்நாட்டில், உள் மாவட்டத்தில் ஏன் உள்ளூரிலேயே இடம்பெயர்ந்து இரவல் வீடுகளிலும் முகாம்களிலும் வாழவேண்டியதாக ஆகிப்போன துயரத்தின் வலி ஒரு அரசியல் போராட்டமாக மேலெழுந்திருக்கிறது.

தமது வாழ்விடங்கள், தம்மைச் சிறைப்படுத்தியுள்ள இராணுவத்தின் இருப்புக்களை உயர்பாதுகாப்புக்குரியவை என்று வியாக்கியானம் செய்யும் போது அதற்கும் அதை ஏற்கும் சர்வதேச சமூகத்திற்கும் தமது மனவலியின் எதிர்ப்பாக இந்தக் கோஷத்தினால் அமைந்த பொங்குதமிழால் அம்மக்கள் தங்கள் அமைதிவழி எதிர்ப்பை ஆக்ரோஷமாக வெளிக்காட்ட அன்றைய நாளை உபயோகித்தனர்.

தம் வீடுகள் உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவமயப்படுத்தப்பட்டிருப்பதை பொங்குதமிழில் மாதிரி வடிவம்போட்டு இராணுவ முகாமையும் அதன் அடையாளங்களையும் பிய்த்து சின்னாபின்னமாக்கி தமது மனக்குமுறலை வெளிப்படுத்தியதன் மூலம் காட்டமான செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒன்றரை வருடப் பேச்சு முயற்சி சமாதானத்தின் அடித்தளமாக அமைந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் உடன்பட்ட மீள்குடியேற்றத்தையே சாத்தியப்படுத்தத் தவறியிருக்கும் இச்சூழலில், சாத்தியப்படுத்தாதவரை நியாயப்படுத்த பிற நாடுகளை ஆலோசனையென்ற பெயரில் துணைக்கிழுத்து வந்து மக்களை விசனப்படுத்திய பின்னணியில் லட்சக் கணக்கில் மக்கள் திரண்டு வந்து தம் சினத்தை வெளிப்படுத்தியிருப்பதே ஒரு செய்திதான்.

எப்பொழுதெல்லாம் தாம் ஒடுக்கப்பட்டதற்கெதிரான நியாயமான தமது அமைதிவழிப் போராட்டங்கள் எதிர்த் தரப்பினால் புரிந்துகொள்ளப்படவில்லையோ அப்பொழுதெல்லாம் அவர்கள் வன்முறைவழிப் போராட்டத்தை தெரிந்தெடுத்திருக்கிறார்கள்; ஆதரித்திருக்கிறார்கள். இதுதான் 1956 இலிருந்து 70வரையான காலத்திலும் நடந்தது. இதுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலும் நடந்தது.

ஒடுக்கப்பட்ட மக்களின் நியாயமான விடுதலை அவாவை உரிமை பற்றிய அவர்களின் உணர்ச்சிகளை புரிந்துகொள்ளவும் ஏற்கவும் தவறும்போது அவர்களின் சீற்றம் வன்முறை அரசியலாக வடிவெடுக்கிறது. ஆயின், அமைதிவழி வாழ்வை சீர்குலைப்பது வன்முறைப் போராட்டங்களல்ல. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை - பற்றிய உணர்ச்சிகளை - புரிந்துகொள்ளாத்தனங்களே.



## இலட்சிய உறுதிகொண்ட ஒரு துணிச்சலான மனிதன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு.குமார் பொன்னம்பலம் அவர்கள் முக்கியமானவர்.

தமிழரின் ஆயுதம்தாங்கிய விடுதலைப் போராட்டத்திற்கும் - அதனை தலைமையேற்று நடாத்திய விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் குமார் பொன்னம்பலம் அவர்கள் ஆரம்பகாலத்தில் தனது ஆதரவை நல்கியிருக்கவில்லை.

ஆயினும், போராட்டம் முனைப்புப்பெற்று - புலிகள் இயக்கம் பாரிய இராணுவ வளர்ச்சியடைந்து விடுதலைக்கான நம்பகத்தன்மை உருவாகிய சூழலில் திரு.குமார் பொன்னம்பலம் அவர்களும் விடுதலைப் பற்றாளனாகமாறி - புலிகள் இயக்கத்தின் தலைமையை ஏற்று பரப்புரைத் தளத்தில் பாரிய பங்களிப்பைச் செலுத்தத் தொடங்கினார்.

தமிழ்மக்களுக்கு எதிராக சிங்கள அரசுகள் புரிந்துவந்த இனப்படுகொலைகளையும் - இன ரீதியான பாரபட்சங்களையும் அவற்றின் கொடூரத் தன்மைகளையும் சட்டரீதியாக அம்பலப்படுத்தி - உலக மனித உரிமைவாதிகளின் கவனத்தை ஈர்த்து தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்ப்பதில் குமார் பொன்னம்பலம் அவர்கள் தனது திறமைகளையும் - விடாமுயற்சிகளையும் காட்டியிருந்தார்.

இதேசமயம், விடுதலைப் புலிகள்தான் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற அரசியல் யதார்த்தத்தையும் அவர் ஏற்றுக் கொண்டு - அதை கொழும்பிலும், வெளிநாடுகளிலும் பரப்புரை செய்தார்.

இந்தப் பரப்புரைகள் சிங்களப் பேரினவாதிகளுக்கு அடக்கமுடியாத ஆத்திரத்தை ஊட்டின. 'கொழும்பில் வாழும் புலி' என்று அவரை உருவகப்படுத்தின. அவரது வாயை மூடமுயன்று தோற்றபோது அவரது உயிருக்கும் உலைவைத்தன.

ஒரு ஜனநாயகவாதியாக இருந்து செயற்பட்ட அவரது கொலை, சிங்கள அரச உயர்பீடத்தின் சர்வாதிகாரப்போக்கை உலகிற்குக் காட்டியது.

ஜனநாயக வழியில் நின்று - போராடி உரிமைபெற முயற்சிக்க வேண்டும் என்று உபதேசித்துவரும் உலக அரசுகளுக்கு, குமார் பொன்னம்பலத்தின் கொலை, சாட்டை அடிபோல வீழ்ந்தது. ●



www.eelamview.com



# கைதவறிப் போகிறது எம் காலம்

—— வியாசன் ——

கூத்துக்கான திரை விலகியபோது
பார்வையாளர் பரவசப்பட்டனர்.
பழுன் வந்தேறிப் பாடிமுடிந்ததுமே
மங்களம் பாடுகின்றனர் நடிகர்கள்.
நம்பிக்கைத் துரோகமிது.
எதிர்பார்ப்புச் சிதற
கோயில் வீதி வெறிச்சோடிவிட்டது.
இறுதியில் எல்லோரும்
தங்களை இனம்காட்டினர்.
ஆடைகளை அவிழ்த்து
அம்மணமாகின்றனர்.
விரலிடுக்கு வெளியூடு
பார்த்திருக்கும் வதையெமக்கு.
குான்டை,
நாயுருவி,
கருவேல்,
சப்பாத்திக்கள்ளி எல்லாமும்
இருந்த ஓரிரு இலைகளையும் உதிர்த்துவிட்டு
வெறும் முள்ளாக விளங்குகின்றன.
இறுதியில் இதுதானெனத் தெரிந்திருந்தும்
இவ்வளவு விரைவிலென எதிர்பார்க்கவில்லை.
நடக்கத் தொடங்கியபின்
எதுவரினும் எதிர்கொள்வோம்.
வேறு வழியில்லை.
வறுமையுற்ற நாடுகளின் வளங்களை வழுக
அவர்கள் இப்படித்தான் வருவார்கள்.
ஒப்பனையிட்ட முகத்தினராய்
இனம்காண முடியாதவாறு வருவார்கள்.
பேய் போலவும்,
நாய் போலவும்,
ஆமி போலவும்,
சாமி போலவும் வருவார்கள்.
வெள்ளையுடையிலும்
காவியுடையிலும்கூடக் கால்பதிப்பார்கள்.
கண்டுபிடிக்கத்தான் காலம்பிடிக்கும்.
பசிக்குப் பால்கொடுக்க வருவதாக,
பனிக்குப் போர்வைகொண்டு வருவதாக,
பள்ளிக்கூடங்களுக்கு கூரைபோடுவதாக,
பாதைகளுக்கு தாருற்றப் போவதாகவும்,
குழாய்க் கிணறடித்துக் குடிநீர் தருவதாகவுமே
எம் முற்றம் இறங்குவர்.
சிரித்தபடியே எம் தெருநுழைவர்.
அப்பாவிகள் போலவும்,
அப்பிராணிகள் போலவுமே இருப்பர்.
வார்த்தைகளில் இனிமையும்
வாதிடும்போதில் தர்க்கமுமிருக்கும்.
எமக்கான கேள்விகளும்,
எங்களுக்கான பதில்களையும்
அவர்களே வைத்திருப்பர்.
ஆபத்பாந்தர்களாக
அநாதை ரட்சகர்களாக
"ஒன்றும் தெரியாத பாப்பா
உள்ளே போட்டாளாம் தாழ்ப்பா"
வெகு சூக்குமமாக நுழைந்திடுவர்.
இனம் காண்பது சிரமம்.
இங்கும் அவர்கள் வந்திறங்கிவிட்டனர்.
முள்ளில் போட்ட சேலையாகினோம்.
விட்டாலும் சரி
எடுத்தாலும் சரி
கிழியப்போவது நாங்கள்தான்.
சமாதான யாத்திரைகள்,
சர்வமதப் பிரார்த்தனைகள்,
கண்ணுக்கினிய கலைவிரவுகள்,
காதுக்கினிய கானமழைகள்,
கவிதேசக் கூட்டங்கள்,
அமைதிக்கான யாகங்கள்
அழிவின் சிதிலங்கள் அப்படியே கிடக்க
அதன்மேலே மேடையிட்டு
எத்தனை ஆரவாரங்கள்.
இன்னும்
அழகுராணிப் போட்டியும்
ஆடையவிழ்ப்பு நடனமுமே மீதி.
அதுவும் அரங்கேறலாம் விரைவில்.
தூயிலுமில்லங்களை உழுது
தொலைத்தவனையே
முதன்மை விருந்தினனாய் அழைத்து
முதல் மரியாதை.
மிலேனியம்,
ஜோலி,
கூல் பரடைஸ்,
சாராயக் கடைகளின் பெயர்களிவை.
இது போராடும் பூமிதானா?
இத்தனையும் போதாதென்று
சின்னத்திரைகளுக்குத் தீனிபோடும்
"சன் ரீவி" தரகர்கள் வேறு.
இதற்குத்தானே உயிர்விலை கொடுத்தோம்.
புகுந்து விளையாடடா.
உன் அழுகவாய் மூடவில்லை,
சிந்தியவிழி காயவில்லை,
குண்டடியில் முறிந்தகால் குணமாகவில்லை,
அழிந்த உறவுகளுக்கான ஆட்டுத்திவசமே
வரவில்லை.
இத்தனை அவசரமா உனக்கு?
கவனம்
பலமிழந்து போவோமெனில்
பக்கத்துவீட்டு நாயும், கோழியும் கூட
எங்கள் முற்றத்தைத்தான் கிளறிப்படுக்கும்.
ஈழத்தமிழர் விடுதலையைச் சொல்லி எத்தனை
வியாபாரம்?
விமானத்திலேயே பறந்துதிரிகின்றனர்
உள்ளூர் என்-ஜி-ஓக்களின் உத்தியோகத்தர்
வறுமைக்கும், பட்டினிக்கும் வழங்கும் பணத்தில்
இவர்கள்தான் மிதுங்குகின்றனர்.
என்ன தேஜஸ்?
என்ன மிடுக்கு?
தாங்கமுடியலையடா சாமீ.
அவசரமவசரமாக எல்லாமும் கீழிறங்கி
எம் முற்றத்தில் தீனி பொறுக்குகின்றன.
மாவீரர் புகழ்பாடிய மதில்களில்
"சன்சில்க் சம்பூ" தலைக்கு நிவாரணி.
"நெஸ்ரமோல்ட்" அதிசக்தி.
"டயலொக்" உங்கள் தோழன்.
"ஜனசக்தி" உங்களின் பாதுகாப்பு.
கும்பாபிசேக விஞ்ஞாபனம்
கவிதேசக் கூட்டத்துக்கு அழைப்பு
தலைமறைவான அனைத்தும்
வழுக்கிவந்து வாசலில் விழுகின்றன.
கைவெடுத்துக் கும்பிடுவதிலேயே
எங்கள் காலம் கழிகிறது.
காலையில் நாளேடுகளை எடுக்க
கைகள் நடுங்குகின்றன.
படுகொலை,
பாலியல் வல்லுறவு என்று பயமுறுத்துகின்றன.
பாடசாலை நண்பனின் பாட்டி செத்ததுக்கு
ஆறாம் ஆண்டு மாணவர்கள் "அனுதாபச்
செய்தி."
ஆலயத்துக்கு வர்ணம் பூச
அமைச்சர் நிதி வழங்கினாராம்
தர்மகர்த்தாசபை "நன்றி செலுத்துகிறது."
விரியும் பக்கமெல்லாம் விளம்பரங்கள்.
நடப்பனயாவும் நல்லன அல்ல.
கவனம்;
கைதவறிப் போகிறது எம்காலம்.